Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 தை 18 செவ்வாய்க்கிழமை (30-01-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:64

# நேற்று பாலசிங்கத்தைச் சந்தித்த பின்னர்
# இன்று சொல்ஹெய்ம் கொழும்பு வருவார்

## புலிகளின் இணையத் தளத்தில் தகவல்

கொழும்பு,ஜனவரி30

**இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நடுநிலையாளராகச் செயற்படும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்று லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்க விருந்தார் என்றும் -**

**அந்தச் சந்திப்பை முடித்துக்கொண்டு இன்று கொழும்பு திரும்பி இலங்கை அரசுத் தலைவர்களுடன் அவர் விரிவாகப் பேச்சு நடத்துவார் என்றும் -**

**புலிகளின் இன்ரர்நெற் இணையத்தளத்தில் நேற்று செய்தி வெளியிடப் பட்டிருந்தது.**

தாம் முன்வைத்துள்ள மோதல் தணிப்பு யோசனைகள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பின் கருத்தை நேற்றைய சந்திப்பின்போது சொல்ஹெய்ம், அன்ரன் பாலசிங்கத்துக்கு விரிவாக விளக்கியிருந்தார் என்றும்-

அவற்றுக்குப் பாலசிங்கம் தரும் பதிலுடன் இன்று கொழும்பு திரும்பும் சொல்ஹெய்ம் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி மற்றும் அரசுத் தலைவர்களைச் சந்தித்து விரிவாகப்பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் -

புலிகளின் இணையத் தளச் செய்தி தெரிவித்தது.

கொழும்பில் அரசுத் தலைவர்கள் தரும் விளக்கங்கள் மற்றும் பதிலுடன் எரிக் சொல்ஹெய்ம் மீண்டும் லண்டனுக்குத் திரும்பி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பார் என்றும் அச்செய்தி குறிப்பிட்டது.

அச்சந்திப்பை அடுத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் தீர்க்கமான சில முடிவுகள் வெளியாகும் என எதிர்பார்க்கலாம் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-3)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் சேவை நேற்று ஆரம்பமானது

திருகோணமலை,ஜன.30

திருகோணமலையிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் நேற்று மாலை 5.30 மணியளவில் காங்கேசன் துறை நோக்கிப் புறப்பட்டது.

இந்தக் கப்பலில் 400 பயணிகள் அழைத்து வரப்படவிருக்கிறார்கள்.

இங்கிருந்து 400 பயணிகளை அழைத்துக்கொண்டு இன்று மாலையே இக்கப்பல் திருமலை நோக்கிப் புறப்படும்.

இன்று கப்பலில் பயணம் செய்வதற்கு பயணச் சீட்டுப் பெற்றவர்களை பயண ஏற்பாடுகளுடன் காலை 7.30 மணிக்கு ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம் கட்டடத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3)

## யாழ்.டாக்டர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்று மேற்கொண்ட ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் காரணமாக ஆஸ்பத்திரிக்கு சிகிச்சை பெறவந்த பல நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெறாது ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

நேற்றைய வேலை நிறுத்தம் குறித்து முற்கூட்டியே டாக்டர்கள் அறிவித்திருந்த போதிலும், ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவுக்கு பல நூற்றுக்கணக்கில் நோயாளிகள் வந்திருந்தனர்.

விசேட மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்கும் விடயத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் - வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த டாக்டர்களுக்கு சுகாதார அமைச்சு பாரபட்சம் காட்டுவதாகத் தெரிவித்து இந்த அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டம் காரணமாக ஆஸ்பத்திரியின் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக்குகளில் சிகிச்சை நடைபெறவில்லை. அவசர சத்திர சிகிச்சைப் பிரிவு மட்டும் இயங்கியது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தரப்பின் பதிலுக்கு காத்திருக்கிறார் சொல்ஹெய்ம்!

லண்டன்,ஜன.30

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தற்போது முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பதிலை உடன் அனுப்பும்படி நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை அரசைக் கோரியுள்ளதாக சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இதுவரை இடம்பெற்ற கலந்துரையாடல்களின் போது தம்மால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான பதிலைத் தாம் எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் -

அந்த விடயங்கள் பற்றிய பதில் கிடைத்ததும் தமது முயற்சியைத் தொடர முடியும் என்றும் -

இலங்கைக்குத் தாம் அறிவித்துள்ளதாக சொல்ஹெய்ம் குறிப்பிட்டார் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (உ-3)

## பாக்.தளபதி கொழும்பில்

கொழும்பு,ஜன.30

பாகிஸ்தான் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் முஹமட் யூசுப்கான் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

இராணுவத் தலைமையகத்தில் பாகிஸ்தான் இராணுவத் தளபதிக்கு விசேட வரவேற்பு ஒன்றும் நடத்தப்பட்டது.

பாகிஸ்தான் இராணுவத் தளபதியை இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (உ-7)

## நோர்வேயின் பங்களிப்புக்கு பிக்குகள் குழு முழு எதிர்ப்பு!

### தூதரிடம் நேரில் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.30

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் நோர்வே தலையிடக்கூடாது என்று பௌத்த பிக்குகளின் குழு ஒன்று கொழும்பில் உள்ள நோர்வேயின் தூதரை நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளது.

அளுத்கமகே சம்மானந்த தேரர் தலைமையிலான ஐவர் கொண்ட குழு ஒன்று நேற்று மாலை 5மணியளவில் நோர்வேத் தூதர் வெஸ்பேர்க்கைச் சந்தித்து ஒரு மணி நேரம் கலந்துரையாடியது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் நோர்வே தலையிடக்கூடாது என்றும் -

இந்தக் கோரிக்கையை மீறி நோர்வே இந்த விவகாரத்தில் தலையிட்டால் தாம் எதிர்ப்புத் தெரிவிப்பர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ப.நோ.கூ.ச. சமாஜ ஊழல் விவகாரம்:
# பகிரங்க விவாதத்துக்கு சிவஞானத்தை அழைக்கின்றார் மகேஸ்வரன் எம்.பி.!

யாழ்ப்பாணம்,ஜன.30

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் நடக்கும் ஊழல்கள் குறித்து பகிரங்க விவாதம் நடத்த வருமாறு சமாசத்தின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்.

சி.வி.கே சிவஞானத்தின் மீது முழு நம்பிக்கை தெரிவித்து சமாசத்தில் அங்கம் வகிக்கும் சங்கங்களின் பிரதிநிதிகள் தீர்மானம் ஒன்றை நேற்று முன்தினம் நிறைவேற்றியது பற்றிய செய்தி நேற்றைய உதயனில் விரிவாகப் பிரசுரமாகியிருந்தது தெரிந்ததே.

அதையடுத்தே 30 விடயங்கள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பி, அந்தக் கேள்விகளுக்கு பகிரங்க விவாதத்தில் விடையளிக்க வருமாறு சமாசத் தலைவர் சிவஞானத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன்.

48 மணி நேரத்துக்குள் விடையளிக்கும் படியும் முடியாவிட்டால் குடாநாட்டில் உள்ள புத்திஜீவிகள், கல்விமான்கள், மதகுருமார்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், நலன் விரும்பிகள், முன்னாள் கூட்டுறவு உத்தியோகத்தர்கள் ஆகியோர் முன்னிலை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூமியதிர்ச்சியால் பாதிப்புற்ற இடங்களில் ஒரே துர்நாற்றம்!

### சடலங்களை எரிக்க விறகு இல்லை

புதுடில்லி,ஜன.30

பூமியதிர்ச்சியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்தியாவின் மேற்கு மாநிலமான குஜராத்தில் அன்ஜார் மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்களில் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் சடலங்கள் அகற்றப்பட்டு எரிக்கப்படாத நிலையில் அங்கு சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசுவதாக ரொய்ட்டர் செய்தியாளர் அங்கிருந்து அறிவிக்கின்றார்.

மீட்கப்பட்ட சடலங்களை எரிப்பதற்கு பெரும் விறகுத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிதை எரிப்பதற்கான விறகுகள் ட்ரக் வண்டிகளில் பூமியதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. விமானப் படை விமானங்களும் விறகுகளை ஏற்றி வருவதாகச் சொல்லப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மேல் நீதிமன்ற முதலாவது அமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்.மாவட்ட மேல் நீதிமன்றத்தின் ஆரம்ப அமர்வு வைபவம் இன்று காலை 9.45 மணிக்கு சம்பிரதாய பூர்வமாக இடம்பெறவுள்ளது. பழைய பூங்கா வீதியிலுள்ள மேல்நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெறும் இந்த நிகழ்வில் சட்டத்துறை சார்ந்தவர்கள் பங்குபற்றுவர். (உ-3-6-10)

## கரவெட்டி நாவலர்மடத்தில்
# ஆறு பிள்ளைகளின் தாய் மீது பாலியல் வல்லுறவுச் சம்பவம்

கரவெட்டி நாவலர்மடம் அகதி முகாமில் தங்கியிருந்த ஆறு பிள்ளைகளின் தாய் கடத்தப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த முகாமில் தங்கியிருந்த 40 வயது நிரம்பிய ஆறு பிள்ளைகளின் தாய் ஒருவரை நேற்று முன்தினம் அங்கு வந்த இருவர் பிஸ்டல் முனையில் கடத்திச் சென்றதாகவும் - அவர்களைத் தொடர்ந்து சென்ற அவரது கணவனைச் சுட்டுப்போவதாக அந்த நபர்கள் எச்சரித்ததாகவும் -

இதனால் பீதியடைந்த கணவன் முகாமுக்குத் திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து அந்தப் பெண்ணை அந்த நபர்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும்-

பின்னர் அந்த நபர்கள் தப்பிச் சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டது.

(உ-3-31-109-117)

## யாழ்.மாவட்ட அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 11.02.2001 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

அங்கத்துவக் கழகங்கள் சங்கச் செயலாளருடன் தொடர்பு கொண்டு பொதுக்கூட்ட நிகழ்ச்சி நிரலைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் கழகப்பிரதிநிதிகள் அவற்றை எதிர்வரும் 7.02.2001 க்கு முன்னர் அனுப்பி உதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

நன்றி

29/13, நக்கா வீதி, யாழ்ப்பாணம். (C/15060)

சண். தயாளன், *செயலாளர்* *யா.மா.அ.மெ.சங்கம்.*


## பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.30

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா கற்கைநெறி முதலாம் 2ஆம் 3ஆம் வருடத்துக்குரிய பாடத்திட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இந்த வருடம் முதல் மாற்றிய மைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் படியே கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறும் என்று யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவன இயக்குநர் தெரிவித்தார். (க-6)

## வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி

வலி.தெற்கு,ஜன.30

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை புதன் கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னாள் உதவிச் செயலாளர் எஸ். பரமநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-152)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.வே.பொ.பாலசிங்கம்

அவர்கள் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியேற்றிருப்பதை மகிழ்ச்சியுடன் பாராட்டி வரவேற்பதோடு அவரது பணி மேலும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

(C/15053) யாழ்.பொதுசன நூலக உத்தியோகத்தர்கள்.

## 31ஆம் நாள் நினைவலைகள்



பூவுலகில் 30 - 12 - 1970

விண்ணுலகில் 31. - 12 - 2000

### அமரர் பொன்னையா கமலரூபன்

(விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

அன்புள்ளம் கொண்ட எம் குல விளக்கே! கமலரூபா!!
ஆனது மாதம் ஒன்று நீங்கவில்லை எம் துயரம்
பாசத்தின் உறைவிடமே எனை வழிநடத்திய அன்புத் துணைவரே!
பாசமுடன் எமை அணைத்து வழிகாட்டிய அன்புச் சோதரனே!!
ஈரமிலா இதயம் கொண்ட காலனவன்
உமையழைத்தான் எமை இங்கு தனியாக்கி.
அரனடியில் அமைதி பெற வேண்டுகின்றோம் எந்நாளும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*நெல்லியடி, கரவெட்டி.* (C/15054)

உன் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, சகோதரர்கள்.


**லஷ்சுமி** இணுவில்

3ஆவது வாரமாக

**விஜயகாந்த் மீனா,** நடித்த

**வானத்தைப் போல**

இன்னிசையில் இனிய பாடல்கள் நிறைந்தது.

*(நீலம்)*

காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்) (83479)

**நாகம்ஸ்** சுன்னாகம்

**டைட்டானிக்**

(தமிழ் ~ நீல்ஸ்) (83469)

காட்சிகள்:10.30, 2.30 (புதிய நேரம்)


**ராஜா** யாழ்ப்பாணம்

**மாதவன், ஷாலினி** மற்றும் பலர் நடிப்பில்

**அலைபாயுதே**

காட்சிகள்: 10.30, 2.00 (பு.நே.) (C/14851)


## கண்ணீர் அஞ்சலி



### வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

(முன்னாள் அரசாங்க மரக்கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர்)

அவர்களின் மறைவையிட்டு வேதனை அடைந்திருக்கும் குடும்பத்தார்க்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*20,முத்தவிநாயகர் வீதி, நல்லூர்.* (83468)

சோ.நவநாதன் (மைத்துனர்)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 9ஆம் ஆண்டு நினைவு கூரல்



தோற்றம் 25 - 02 - 1943

மறைவு 09 - 02 - 1992

பாசத்தின் திருவுருவமாய்
பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
ஒன்பது ஆண்டு அல்ல
பல ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களை விட்டு
என்றும் மாறாதையா!

### அமரர் மு.இரத்தினவேலு

(சந்தணம்)

திதி: 30.01.2001

இன்று (30-01-2001) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நினைவு கூரல்

**பிறேம் நகை மாடம்**

தங்க நகை வியாபாரம்

(22 கரட் தங்க நகைகள் செய்து கொடுப்பதற்கு தலைசிறந்த ஸ்தாபனம்)

*யாழ்.வீதி, மானிப்பாய்.* மகன்: பிறேமகுமார்.

*சேச் லேன், சுழிபுரம், ஆனைக்கோட்டை.*

(83461)

உங்கள் பிரிவால் வாடும்: மனைவி, பிள்ளைகள், மருமகன், மருமகள்.

# உதயன்

## காதில் ஏறுமா?

வடபகுதி மக்களின் போக்குவரத்து மற்றும் உணவுப் பிரச்சினைகள் குறித்துச் சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு அரசாங்கம் பதில் தராவிடில், அவற்றை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்வேன், சர்வதேச மயப்படுத்துவேன் —

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தி. மகேஸ்வரன் இவ்வாறு அறிவித்திருக்கிறார்.

அரசாங்கம் பதிலளித்தாலும் சரி, பதிலளிக்காவிடினும் சரி, வடபகுதி மக்களின் போக்குவரத்து, பொருள் தருவிப்பு விடயங்கள் ஐக்கிய நாடுகள் சபைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டியவையே.

அரசாங்கம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தனது முழு ஆணையையும் கைவரப்பெற்று, முழு அளவில் நிர்வாகத்தைச் செய்யத் தொடங்கி ஐந்து வருடங்கள் ஆகின்றன. ஆனால் குடாநாட்டு மக்களுக்கு அவர்களின் மிக அடிப்படை உரிமைகளான உணவுப் பொருள்களைத் தடங்கலின்றிப் பெறுதல், போக்குவரத்துச் செய்தல் என்பன பூரணமாகக் கிடைக்கவில்லை.

இவ்விடயம் பத்திரிகைகளில் பலதடவைகள் வெளிப்படுத்தப்பட்டது. அரசியல்வாதிகளாலும் எடுத்துச் சொல்லப்பட்டது. மக்கள் அமைப்புகள் பலவற்றினாலும் ஏனைய தரப்புகளாலும் மகஜர்கள், கடிதங்கள் மூலம் அரசுக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஆனால் போக்குவரத்து வசதி, பொருள்கள் தருவிப்பு ஆகிய விவகாரங்கள் நிமிர்த்த முடியாத நாய் வால் போன்று இன்னமும் வளைந்தே — சுருண்டே — உள்ளன.

போக்குவரத்தைப் பொறுத்த வரையில், அவசர தேவை ஒன்றுக்குக் கூட உரிய காலத்தில் செல்ல முடிவதில்லை. தடங்கல்களும், தாமதங்களும், கரண்டல்களும் சர்வ சாதாரணமாகி விட்டன. வெளிமாவட்டப் போக்குவரத்து என்றால் சலிப்பும் வெறுப்பும் மக்களைச் சூழ்ந்து கொள்கின்றன.

பொருள்களைத் தருவிப்பதில் உள்ள தடங்கல்கள், தாமதங்கள், வசதிக் குறைவுகளால் இத்தனை வருடங்கள் கழிந்தும் யாழ்ப்பாணத்தில் பாவனைப் பொருள்களின் விலைகள் ஏனைய பிரதேசங்களை விட அதிகமாகவே உள்ளன. உயர்ந்த கப்பல் கட்டணங்கள், விசேட வரிகள் என்பன விலைகளை மேன்மேலும் உயர்த்துகின்றன.

இந்தக் குறைகள், பாதிப்புகள், தாக்கங்கள் குறித்து யார் கூறினாலும், அது அரசுப் பக்கத்தில் செவிடன் காதில் ஊதிய சங்காகவே ஆகிறது. பயன் எதுவும் இல்லை; மாற்றத்தை, முன்னேற்றத்தைக் காண இயலவில்லை.

இவை எல்லாவற்றையும் மூடி மறைக்கும் விதத்தில், வானொலிப் பேச்சுக்களிலும், தொலைக்காட்சிச் செவ்விகளிலும் குடாநாட்டை அபிவிருத்தி செய்யப் போவதாகப் பிரமாதமாகக் கூறப்படுகிறது.

ஐ.நாவுக்கு இவ்விடயங்களைக் கொண்டு சென்றாலும் கூட அரசு அக்கறை கொள்ளுமா என்பது சந்தேகம். வெளிநாட்டு அழுத்தங்களுக்கு அடிபணியப் போவதில்லை என்ற கோஷம் அதனை மேலும் வலுப்படுத்துகிறது. எனினும் தமிழர்களுக்கு இப்படியும் நடக்கிறது என்ற விபரத்தை உலகத்துக்குத் தெரியப்படுத்தும் ஆக்கபூர்வமான முயற்சியாக அமையலாம்.

# எஸ்ரடாவை மீண்டும் அதிபராக்க பிலிப்பைன்ஸ் இராணுவம் வலியுறுத்து

மணிலா, ஜன. 30

பிலிப்பைன்ஸில் ஜோசப் எஸ்ரடாவை மீண்டும் அதிபர் பதவியில் அமர்த்தவேண்டும் என்று இராணுவத்தில் ஒரு பகுதியினர் வலியுறுத்தியுள்ளனர்.

ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு இலக்காகிய ஜோசப் எஸ்ரடா மக்களின் நிர்ப்பந்தத்தால் இரு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகியிருந்தார்.

அவரையடுத்து, உப ஜனாதிபதியாக இருந்த எதிர்க்கட்சித் தலைவி குளோரியா அரோயா ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

அரோயாவுக்கு பிலிப்பைன்ஸ் இராணுவம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவித்தது.

எஸ்ரடா மீதான ஊழல் வழக்குகள் தொடர்ந்து நேர்மையாக நடத்தப்படும் என்று அரோயா அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் கடந்த வாரம் இராணுவ அதிகாரிகளில் ஒருபகுதியினர் எஸ்ரடாவை மீண்டும் பதவியில் அமர்த்தவேண்டும் என வலியுறுத்தினர்.

ஆனால் உயர் அதிகாரிகளின் தலையீட்டால் இந்தக் கருத்து முரண்பாடு அகற்றப்பட்டதாகவும் —

இராணுவம் ஏகமனதாகப் புதிய அதிபருக்கு ஆதரவு வழங்குவதாகவும் இராணுவத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக அரோயா, பிலிப்பைன்ஸ் இராணுவத் தலைமையகத்துக்கு விஜயம் செய்தார்.

அங்கு உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஜனாதிபதி அரோயா பாதுகாப்புப் படையினர் தொடர்பாக நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டு மக்களின் சுயகௌரவத்தை உறுதி செய்வதாகவும் —

அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இராணுவம் உறுதியளித்துள்ளதாகவும் — அரோயா மேலும் கூறியுள்ளார். (ஒ-5-7)

# புதிய அதிபரின் கன்னிப்பேச்சுக்கு கொங்கோவில் கடும் எதிர்ப்பு

கின்ஸாஸா, ஜன. 30

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் அதிபராகக் கடந்த வெள்ளியன்று பதவியேற்ற ஜோசப்கபிலா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையினால் கடுமையான விமர்சனங்களை எதிர்நோக்கியுள்ளார்.

கொங்கோ மக்களுக்கு அவர் ஆற்றிய உரையில், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

கொங்கோவின் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ள தீவிரவாத இயக்கம் மற்றும் பிரதான எதிர்க்கட்சியான கொங்கோ ஜனநாயகப் பேரவை ஆகிய வற்றை சமாதான முயற்சியில் ஈடுபடுத்துவது குறித்து அதிபர் எதுவும் தெரிவிக்கவில்லை.

இதற்கு ருவாண்டா, உகண்டா ஆகிய நாடுகளின் ஆதரவுள்ள தீவிரவாதிகளும் பிரதான எதிர்க்கட்சியும், தமது கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளின் வெளியகப் பரிணாமங்களை புதிய அதிபர் புரிந்து கொள்ளவில்லை என்று எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதிபராக இருந்த லோரன்ற் கபிலா சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து பதவியேற்றுள்ள 32 வயதான ஜோசப்கபிலாவின் அனுபவமின்மையையே அவரது உரை சுட்டிக் காட்டுவதாக தீவிரவாதிகளின் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் தந்தையை அடுத்து அவரது வாரிசு அதிபராவது இதுவே முதல் தடவை எனக் கூறப்படுகிறது. (ஒ-5-7)

## உலக அரங்கில்

## கொலம்பியாவில் தஞ்சமடைந்திருந்த
# பெருவின் முன்னாள் ஜனாதிபதி தாய்நாட்டுக்குத் திரும்பினார்

லிமா, ஜன. 30

கடந்த 8 வருடங்களாக கொலம்பியாவில் தஞ்சமடைந்திருந்த பெருவின் முன்னாள் ஜனாதிபதி அலெக்ஸ் காஷியா நாடு திரும்பினார்.

லிமா விமான நிலையத்தில் அவர் வந்து இறங்கியபோது ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர்.

1985—90 காலப்பகுதியில் பெருநாட்டு ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர் அலெக்ஸ் காஷியா.

அந்தச் சமயத்தில் மோசடிகள் மற்றும் ஊழலில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

பதவிக்காலம் முடிந்த பின்னர் காஷியா மீது மோசடிகள் தொடர்பாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு வழக்குகளும் தொடுக்கப்பட்டன.

அத்துடன் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்ததற்கும் காஷியாவே காரணம் என்று கூறப்பட்டது.

இதனால் 1992 ஆம் ஆண்டு காஷியா நாட்டைவிட்டு வெளியேறி கொலம்பியாவில் வசித்து வந்தார்.

கடந்த வாரம் மனித உரிமைகளுக்கான ஆதரவு நீதிமன்றத்தின் சிபார்சின் பேரில் பெரு உச்ச நீதிமன்றம் காஷியா மீதான வழக்குகளை ரத்துச் செய்தது.

இதனையடுத்தே அவர் தாய்நாடு திரும்பியுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் அங்கு நடைபெற உள்ள ஜனாதிபதித் தேர்தலில் காஷியா போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-5-7)

## நாளை

தை 18

புதன்கிழமை

திதி: ஸப்தமி

பின் இரவு 3.26 வரை.

நட்சத்திரம்: அச்சுவினி

வைகறை 5.28 வரை.

ரதஸப்தமி நாள்

சுபநேரம்: 5.06 — 6.36

ராகுகாலம்: 12.36 — 2.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உன் நாவைக் காப்பாற்று; உன் நண்பனைக் காப்பாற்றுவாய்.

## குஜராத்தில் மீண்டும் அபாயம் ஏற்படலாம்

புதுடில்லி, ஜன. 30

குஜராத்தில் கஜ் மற்றும் அகமதாபாத்தின் இதர பகுதிகளில் அடுத்த 48 மணித்தியாலங்களில் மீண்டும் பூமியதிர்ச்சி ஏற்படலாம் என்று இந்திய புவியியல் ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. இதேசமயம் நேற்றுக்காலை 6 45 மணியளவில் இப்பகுதியில் ஏற்பட்ட அதிர்வுகள் மக்களிடையே அச்சத்தை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது.

## மரங்களுக்குத் திருமணம்

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் இயற்கை அழிவுகளில் இருந்து காப்பாற்ற அத்திமரத்துக்கும் ஆலமரத்துக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டது.

பொலீஸ் பாதுகாப்புடன் நடந்த இந்தத் திருமணத்தில் 15 ஆயிரம் ரூபா செலவில் விருந்தும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

## விமான விபத்து: 24 பேர் பலி!

வெனிசூலாவில் விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் அதிலிருந்த 24 பேரும் உயிரிழந்தனர்.

தலைநகர் பராக்கசிலிருந்து உலகில் மிக உயரமான நீர் வீழ்ச்சியான ஏஞ்சல் வோல்ஸ்யை கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற சிறியரகப் பயணிகள் விமானமே விபத்துக்குள்ளாகியது.

இந்த விமானம் கடந்த 50 வருடங்களாக சேவையில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

## சார்ள்ஸ் - டயானாவின் மகனான
# வில்லியத்துடன் கல்வி கற்பதற்கு அலைமோதும் இளம் பெண்கள்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் - மறைந்த டயானா ஆகியோரின் மூத்த மகனான வில்லியத்துடன், கல்வி கற்க அமெரிக்க இளம் பெண்கள் ஆர்வம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டன் ஈட்டன் கல்லூரியில் கல்வி கற்றுவந்த 18 வயதான வில்லியம் 4 ஆண்டுப் பட்டப் படிப்பை ஸ்கொட்லாந்து சென். அன்ட்ரூஸ் பல்கலைக்கழகத்தில் தொடர உள்ளார்.

இந்தத் தகவல் வெளியாகியதில் இருந்து, சென். அன்ட்ரூஸ் பல்கலைக்கழகத்துக்கு வரும் விண்ணப்பங்கள் 44 4 சதவீதம் அதிகரித்துள்ளதாக மாணவர் சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துள்ள விண்ணப்பங்கள் இளம் பெண்களிடம் இருந்து — குறிப்பாக அமெரிக்கப் பெண்களிடமிருந்து — வந்துள்ளதாகவும் —

கம்பீரத் தோற்றமும், வசீகர பழக்க வழக்கங்களும் கொண்ட வில்லியத்துடன் சேர்ந்து கல்வி கற்க இளம் பெண்கள் ஆர்வமாக உள்ளதையே இது காட்டுவதாகவும் — பல்கலைக்கழக நிர்வாகி ஒருவர் கூறினார்.

அமெரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் சென். அன்ட்ரூஸ் பல்கலைக்கழகம் குறித்து அறிய ஏராளமான இளம் பெண்கள் தினமும் வருகின்றனராம்.

மறைந்த இளவரசி டயானா பிரிட்டிஷ் மக்களின் பேரன்பைப் பெற்றிருந்தது போலவே அவரது மகனான வில்லியத்தையும் அவர்கள் விரும்புவதாகக் கூறப்படுகிறது. (ஒ-5-7)

## பெங்களூரில் நிலநடுக்கம்

இந்தியாவில் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் நேற்றுக் காலை இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

சுமார் 10 வினாடிகள் நீடித்த இந்த நிலநடுக்கத்தின் அளவு 4.3 ரிச்டராகப் பதிவாகியுள்ளது. இதனால் உயிர், உடைமைச் சேதங்கள் ஏற்படவில்லை என்று நம்பப்படுகிறது.

பீதியினால் கட்டடங்களுக்குள் இருந்து மக்கள் வீதிகளுக்கும் வெட்டவெளிப் பிரதேசங்களுக்கும் சென்று தங்கியதாகவும், பின்னர் வெகுநேரம் கழித்தே அவர்கள் பயம் நீங்கித் திரும்பியதாகவும் கூறப்படுகிறது. (ஒ-5-7)

# குஜராத் பூமியதிர்ச்சியிலிருந்து அதிர்ஷ்டவசமாகத் தப்பியோர்

குஜராத் பூமியதிர்ச்சியிலிருந்து ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

அகமதாபாத்தில் இருந்து 150 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சம்லா என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்களே இந்த அதிர்ஷ்டசாலிகளாவர்.

பூமியதிர்ச்சி ஏற்பட்ட அன்று இந்தியக் குடியரசுத் தினமாதலால், சம்லா கிராமத்தைச் சேர்ந்த அனைவரும் குடியரசுத்தினக் கொண்டாட்டத்தைப் பார்க்கச் சென்றிருந்தனர்.

அகமதாபாத்தை பூமியதிர்ச்சி தாக்கியபோது சம்லாவிலும் அதன் தாக்கம் உணரப்பட்டது இதனால் கட்டடங்கள் இடிந்து வீழ்ந்தன.

ஆனால் மக்கள் அனைவரும் வெளியேறி இருந்ததால் உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை.

இது போன்று சென்னையைச் சேர்ந்த அரசு வர்த்தகக் கழகத் துணைத் தலைவர் வெல்கடேசன் கஜ் பகுதியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

பூமியதிர்ச்சி தாக்கிய சமயத்தில் முதல் மாடியில் இருந்து ஜன்னல் வழியாகக் குதித்து அவர் உயிர் தப்பினார்.

# ஆனைக்கோட்டை வீதியில் அடிக்கடி நிகழும் விபத்துகள்

நெல்லியடி, ஜன. 30

ஆனைக்கோட்டை குருசு மதவடியிலிருந்து உயரப்புலம் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்குச் செல்லும் வீதி பல மாத காலமாக கவனிப்பாரற்ற நிலையில் சேதமடைந்துள்ளது. இந்த வீதியில் குப்பை கூளங்களும் குவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை குருசு மதவடிப் பகுதியில் உள்ள மானிப்பாய் வீதி இரு மருங்கும் உடைந்து குழிகள் காணப்படுகின்றன. இதனால் இப்பகுதியில் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன.

அத்துடன் இப்பகுதியில் வீதி மின் விளக்குகள் இதுவரை பொருத்தப்படவில்லை. இதனால் இரவு வேளைகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

அண்மையில் இப்பகுதியில் ஒரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையிலும் தனியார் விற்பனை நிலையத்திலும் கூரை பிரித்து பெறுமதிமிக்க பொருள்கள் திருடப்பட்டிருக்கின்றன. [க–109]

# கண்ணீர் அஞ்சலி

எமது துறை மாணவி
**தர்மினியின்**
அன்புத் தந்தையார்

## வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

அவர்கள் 28—01—2001 அன்று காலமான செய்தி அறிந்து மனவேதனை அடைந்ததுடன் அவரது குடும்பத்தினரின் துயர்வில் பங்கு கொள்வதோடு கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

**முதலாம் வருட வணிகத்துறை மாணவர்கள்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

(83550)

# வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கணக்காய்வு அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் 31 - 12 – 2000 ஆம் வரையான காலத்திற்குரிய கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 25 - 10 - 98 க்கு முற்பட்ட காலத்திற்கான கணக்குப் புத்தகங்கள், கணக்கறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் சங்கத்தில் இல்லாமையால் சங்கத்துடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டோர், வருமதிகள்/ செல்மதிகள் இருப்பின் அதனை உறுதிப்படுத்துவதற்கு 05 – 02 – 2001 க்கு முன்னர் எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். இத் திகதிக்கு பின்னர் மேற்கொள்ளும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

செயலாளர் தலைவர்

தொடர்பு;

**அரச கால்நடை வைத்திய காரியாலயம்,**
சங்கரத்தை சந்தி (அருகாமை),
வட்டுக்கோட்டை.

(சி/15016)

# 199 தொழிலாளர்கள் மேலதிகம்; மாதாந்தம் 10 லட்சம் ரூபா இழப்பு!

## யாழ். மாநகர சபையில்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். மாநகர சபையில் தினந்தோறும் 199 தொழிலாளர்கள் மேலதிகமாக வேலை செய்வதனால் மாதம் ஒன்றுக்கு 10 லட்சம் ரூபா நிதி வீண் விரயமாகிறது.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற யாழ். மாநகர சபையின் மாதாந்த பொதுக் கூட்டத்தில் யாழ். மாநகரசபை மேஜர் இ. ரவிராஜ் கவலை தெரிவித்தார்.

மேற்படி கூட்டத்தில் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:—

மாநகர சபையில் தொழிலாளர்கள் தினந்தோறும் 5 மணி நேரம் தான் வேலை செய்கின்றார்கள். ஆனால்சட்டப்படி 8மணி நேரம் வேலை செய்ய வேண்டும். இதன் மூலம் நாள் ஒன்றுக்கு 199 தொழிலாளர்கள் மேலதிகமாக வேலை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கான மாதாந்த சம்பளமாக 10 லட்சம் ரூபா நிதி மாநகர சபையால் வழங்கப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் இவர்களைக் கடமையில்இருந்து இடைநிறுத்தினால் அவர்களது குடும்பங்கள் வருமானங்களை இழந்து கஷ்ரப்படவேண்டிவரும் என்பதால் தொடர்ந்து சம்பளத்தை வழங்கி வருகின்றோம்—என்று தெரிவித்தார்.

## சுண்டுக்குளி ப. நோ. கூ. கிளை பழைய இடத்தில்

அரியாலை, ஜன. 30

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் சுண்டுக்குளி 27 ஆம் இலக்கக் கிளை மீண்டும் பழைய இடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

## மின்கம்பி இணைப்பு இதுவரை இல்லை

கொக்குவில், ஜன. 30

ஈவினையில் புதிதாக மின்கம்பங்கள் நடப்பட்ட ஒரு பகுதி நீண்டகாலமாக மின்கம்பி இணைப்பு செய்யப்படாமல் உள்ளது.

இப்பகுதி வாசிகள் மின் விநியோகம் எப்போது கிடைக்கும் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

(க-66)

# யாழ்ப்பாண வணிகர் கழகம்

27.01.2001 இல் நடைபெற்ற
பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட
2001 ஆம் ஆண்டுக்கான

**நிர்வாகசபை உத்தியோகத்தர்களின் விவரம்:**

தலைவர்:–
**திரு. கந்தையா விஸ்வலிங்கம் குலரத்தினம்**

உபதலைவர்:– **திரு. பஞ்சாட்சரம் சிவபாஸ்கரன்**

செயலாளர்:–
**திரு. கார்த்திகேசு நித்தியானந்தன்**

உப.செயலாளர்:– **திரு. இராசையா ஜனக்குமார்**

பொருளாளர்:– **திரு. திருநாவுக்கரசு சிவதாசன்**

## நிர்வாக சபை உறுப்பினர்கள்

- திரு. தம்பிப்பிள்ளை சற்குணராசா
- திரு. இரத்தினம் சிவலிங்கம்
- திரு. குமாரசாமி தர்மராசா
- திரு. வேலுப்பிள்ளை முத்துலிங்கம்
- திரு. குமாரசாமி கங்கைவேணியன்
- திரு. தம்பையா சங்கரப்பிள்ளை
- திரு. ஆறுமுகம் குணரட்ணம்
- திரு. பேரம்பலம் நாகரத்தினம்
- திரு. இரத்தினலிங்கம் ஜெயசேகரம்
- திரு. தம்பிஐயா சின்னராசா
- திரு. குழந்தைவேலு இராமச்சந்திரன்
- திரு. கந்தையா நந்தகுமாரன்
- திரு. தம்பையா கந்தசாமி
- திரு. நாகராசா ஸ்ரீஸ்கந்தராசா.

**யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.**

இல. 165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (சி/15049)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

## இராமலிங்கம் சின்னாச்சிப்பிள்ளை

பிறப்பு 01-08-1915 இறப்பு 31-12-2000

அன்புத் தெய்வமே, பண்பின் உறைவிடமே,
பாசத்தின் பிறப்பிடமே, பொறுமையின் பொக்கிஷமே
போகும் இடம் தான் சொல்லாமல் போனதென்ன
கதறி அழுகின்றோம் காலனின் பிடியை நினைத்து
மீண்டும் ஒரு முறை உங்கள் திருமுகம் காட்ட
உதிப்பீரோ தரணியில்...

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்.**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**
**உற்றார், உறவினர்.**

க. பகீதரன்
விநோதன் ஸ்ரோர்ஸ்,
2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. (83546)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு முத்திரையிடல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குட்பட்ட மாநகர சபைக் கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்களிலும் உள்ள நிறுவைகள் அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு கீழ்க்காணும் நிரலுக்கு ஏற்ப பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் கீழ்க்காணப்படும் திகதிகளில் குறித்த நேரத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு தங்களது தராசுகளைக் கொண்டு சென்று தவறாது முத்திரையிடுமாறு மாநகரசபைக் கடைகளின் குத்தகை உரிமையாளர்களையும் மற்றும் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களையும் கேட்டுக் கொள்கின்றேன்.

நிரல்

| திகதி | நேரம் | இடம் |
|---|---|---|
| 30–01–2001 | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் |
| 31–01–2001 | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் |
| 01–02–2001 | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் |
| 02–02–2001 | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் |
| 06–02–2001 | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் |
| 08 02–2001 | காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை | மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் |

**இராசா தணிகாசலம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2001—01—26

(சி/15047)

## ஜேர்மன் நிறுவனம் அமைத்த

# பாடசாலை மலசல கூடங்கள் பராமரிக்கப்படாத நிலையில்

யாழ்ப்பாணம்,ஜன.30

ஜேர்மன் தொண்டு நிறுவனத்தால் (ஜி.ரி.இசற்) யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் தகுந்த முறையில் பராமரிக்கப்படாமல் இருப்பது குறித்து அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சுமார் 150 பாடசாலைகளில் இந்த நிறுவனத்தினால் மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் பல பாடசாலைகளில் அவை அமைக்கப் பட உள்ளன.

கடந்த வாரம் மலசல கூடங்களைப் பார்வையிடுவதற்காக சில பாடசாலைகளுக்கு விஜயம் செய்த ஜேர்மன் நிறுவனத்தின் கட்டடப் பகுதி நிபுணர் புறூனோ அம்ஸ்லர் **(Bruno Wamsler)** அவை தகுந்த முறையில் பேணப்படாமல் இருப்பதை அவதானித்துள்ளார்.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலன்கருதி சுகாதாரம் பேணும் நன்நோக்குடன் நிறுவப்பட்ட மலசல கூடங்கள் சுத்திகரிக்கப்படாமலும், சரிவரப் பயன்படுத்தப்படாமலும் இருப்பது குறித்து அந்த அதிகாரி கவலை வெளியிட்டார்.

பாடசாலை நிர்வாகங்கள் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

இதேவேளை-

பாடசாலைகளில் அமைக்கப்பட்ட மலசல கூடங்களைத் தொடர்ந்து கண்காணித்து அற்றைச் சிறப்பாகப் பராமரிக்கும் பாடசாலைகளைத் தெரிவு செய்து பரிசில் வழங்கும் திட்டம் ஒன்றை ஜேர்மன் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்க உள்ளதாக அந்த நிறுவனத்தின் யாழ்.அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

### தபால் விநியோகம்

ஈச்சமோட்டைப் பகுதிக்கு தபால்கள் விநியோகிக்கும் பணி மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதைத் தொடர்ந்து தபால திணைக்களம் இந்தப் பணியை ஆரம்பித்துள்ளது. (க-17)

## பயண அனுமதிக்கு முறையற்ற வசூல்

# இடைத்தரகர் சிக்கினார் பொலீஸார் விசாரணை

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணத்தில் பயணிகளிடமிருந்து முறையற்ற வகையில் பணம் வசூல் செய்த நபர் ஒருவர் குறித்த முறைப்பாடு யாழ்ப்பாணம் ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்குக் கிடைத்ததை அடுத்து சம்பந்தப்பட்டவர் இனங்காணப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து ஈ.பி.டி.பியினர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்குப் போக்குவரத்துவசதிகள் மட்டுப்பட்டவையாகவே உள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுக்கொடுத்தல், பயணச் சீட்டுக்கள் பெறுவதில் முன்னுரிமை பெற்றுக் கொள்ளல் என்பன போன்ற காரணங்களைக் காட்டிப் பொது மக்களிடமிருந்து இடைத்தரகர்கள் பணம் வசூல் செய்வதான முறைப்பாடுகள் கிடைத்துவந்தன. எனினும் பயணச் சீட்டு விநியோகத்தை வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் ஊடாக வடபகுதி புனரமைப்பு புனர்நிர்மாண அதிகாரசபை பொறுப்பேற்ற பின்னர் முறைக்கேடுகளைக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலைமையிலேயே உருத்திரா எனும் சந்தேகநபர் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. இந்த நபர் சிலரிடம் முறையற்ற வகையில் பணம் வசூல் செய்துள்ளதாகத் தெரியவந்தது. இதனையடுத்து அவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். பொலஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுளளனர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சு அனுமதி பெறுதல், பயணச்சீட்டில் முன்னுரிமை பெறுதல் என்பன போன்றவற்றிற்காகப் பொது மக்கள் இடைத்தரகர்கள் எவரையும் நாம் வேண்டாம் எனவும் முறையற்ற வகையில் பயண முன்னனுமதி பெற விளைய வேண்டாம் எனவும் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பதில் அமைப்பாளர் ந.மதனராஜா பொது மக்களுக்குக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் இத்தகைய செயல்களில் ஈடுபடும் இடைத்தரகர்கள் பற்றிப் பொதுமக்கள் தகவல் தந்துதவ வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (க)

# டாக்டர்களில் சிலர் நோயாளரைக் கண்டதுமே மருந்தை எழுதிக் கொடுத்து விடுகிறார்கள்!

## வல்வை மருத்துவமனையில் நடந்த விழாவில் சாவகச்சேரி நீதிவான்

நெல்லியடி,ஜன.30

டாக்டர்கள் நோயாளரிடம் அன்பாகப் பேசி வருத்தத்தைக் கண்டறிந்து மருந்து கொடுக்க வேண்டும். ஆனால் டாக்டர்களில் சிலர் நோயாளிகளைக் கண்டதுமே மருந்தை எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். இந்த நிலைமை மாறவேண்டும்.

இவ்வாறு வல்வெட்டித்துறை மருதத்துவமனையில் நடைபெற்ற, இலவச கண்ணாடி வழங்கும் விழாவிலும், போசனகூடத் திறப்பு விழா விழாவிலும் கலந்து கொண்டு பேசிய சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில், மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்த விழாக்கள் இடம்பெற்றன.

விழா ஆரம்பத்தில் யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி), சாவகச்சேரி நீதிவான் அ.பிறேம்சங்கர், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றினர்.

இங்கு வல்வை நகர சபையால் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நோயாளர் போசன சாலையை பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) திறந்து வைத்தார். விழாவில் தொடர்ந்து பேசிய சாவகச்சேரி நீதிவான் தெரிவித்ததாவது:-

துணிவும், விடாமுயற்சியும் கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரியை, வல்வெட்டித் துறை கிராமம் பெற்றிருப்பதால் இந்த மண் மேலும் பெருமை அடைகின்றது. யாழ்.மாவட்டத்தில் உள்ள எத்தனையோ அரச மருத்துவமனைகளுக்குள் செல்லும் போது மூக்கைக் கையால் பொத்திக் கொண்டு செல்லும் நிலை இன்றுள்ளது. ஆனால் அந்த நிலை வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையில் இல்லை. இதனை தனது இல்லம்போல் பயன்படுத்தி வரும் மாவட்ட வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள், இவ்வைத்தியசாலையில் பல்வேறுவகைப்பட்ட கட்டட புனரமைப்புக்களை, இலகுவில் செய்து முடித்து வருவதைக் காணமுடிகின்றது.

இன்று இங்குள்ள பல மருத்துவமனைகளில் நோயாளர்கள் தமக்குள்ள வருத்தத்தைக் கூற முன்னர் டாக்டர்கள் மருந்தை எழுதிக் கொடுக்கின்றார்கள். அவ்வாறான டாக்டர்கள் வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையின் சேவைத் திறனைப் பின்பற்ற வேண்டும் - என்றார்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் தமது உரையில் தெரிவித்ததாவது:-

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையை ஆதார வைத்தியசாலையாகவும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்துமாறு, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். இவ்வருட நடுப்பகுதியில், இவ்விரு வைத்தியசாலைகளும், தரம் உயர்த்தப்படவிருக்கின்றன.

யாழ்.பிராந்திய பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளரின் கீழ் இயங்கி வரும் இவ்வைத்தியசாலை பல வருட காலமாக புறக்கணிக்கப்பட்டு வருகின்ற போதிலும், மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாளின் விடா முயற்சியினால் மேன்மேலும் பல அபிவிருத்திகளை அடைந்து வருகின்றது.

இந்நிலையில் மாவட்ட வைத்திய அதிகாரியின் சேவைக்காலம் ஏப்ரல் மாதம் முடிவடையும் தறுவாயில் இருந்த போதிலும், மேலும் ஒரு வருட காலம் அவருக்கு சேவை நீடிப்பு வழங்க வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இணங்கியுள்ளது. இதற்குக் காரணம் அவரது தன்னலமற்ற சேவைத் திறனே ஆகும். தென பகுதியில் தினமும் கோடிக்கணக்கான ரூபாயில் அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் ஸ்ரீலங்கா அரசு, வடபகுதியைப் புறக்கணித்தே வருகின்றது.

### உறங்கும் புற்றுநோய் இயந்திரம்!

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச மருத்துவமனைக்கென கொண்டு வரப்பட்ட புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் இயந்திரம் தகுதியான தொழில்நுட்பவியலாளர் குழு இங்கு இல்லாததினால் பொருத்தப்பட முடியாத நிலையில் உறங்கிக் கொண்டிருக்கிறது.

தற்பொழுது யாழ்.மாவட்டத்தில் டாக்டர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவி வருவதனால், அரச மருத்துவமனைகளில் சேவை நீடிப்பில் உள்ள டாக்டர்கள் மத்தியில், உடல் வலு உள்ளவர்களுக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளேன் என்றும் கூறினார்.

### அந்நிய மோகம்

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் சி.சிவஞானசுந்தரம் (நந்தி) தமது உரையில்:-

யாழ்.பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்திலிருந்து வெளியேறும் மாணவர்கள், தமிழ்ப்பற்றை, தமிழ் மண்ணை மறந்து அந்நிய நாட்டுக்குச் செல்கிறார்கள். இதனைத் தடுக்க அந்த மாணவர்களின் பெற்றோர் முன்வருவதில்லை. இது பெரும் வேதனையைத் தருகின்றது.

வல்வெட்டித்துறை மாவட்ட மருத்துவமனையின் மாவட்ட வைத்திய அதிகாரி மேலும் ஐந்து வருடம் கடமையில் இருந்தால் இவ்வைத்தியசாலை தானாகத் தரம் உயரும் என்பதில் ஐயமில்லை.

மனித மேம்பாடு, தாய் அன்பு ஒரு மனிதனுக்கு மிக அவசியம். அப்பொழுது பேச்சில் சத்தியமும் உண்மையும், செயலில் அஹிம்சையும் உருவாகும். தமிழ் மக்களின் சரித்திரத்தில் வல்வெட்டித்துறை ஒரு போதும் புறக்கணிக்கப்படமாட்டாது- என்றார்.

இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் என்.மகேந்திரன், மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதபிள்ளை, சட்டத்தரணி இ.உருத்திரா உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

கண் பரிசோதனையின் போது தெரிவு செய்யப்பட்ட 200 பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (க-109)

# வாசகர் திருமுகம்

## கால்நடைச் சந்தை வசதிகள் குறித்து கவனத்தில் எடுக்குக!

விவசாயிகளும் ஏனைய உற்பத்தியாளர்களும் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு போதிய சந்தை வசதிகளைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும். தமது உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலையினைப் பெற்றுக்கொள்ளுதல் சந்தைப்படுத்துதல் பாவனையாளர்களுக்கு அவை கிடைக்கப்பெறுதல் என பலவகையான செயற்பாடுகள் "சந்தை வசதிகள்" மூலம் கிடைக்கின்றன.

இவ்வகையில் மரக்கறி வகைகள், கடலுணவுகள், வாழைப்பழம், தேங்காய் முதலியன இன்று சந்தை வசதிகளைப் பெற்றுள்ளன.

எனினும் கால்நடைகளைப் பொறுத்தவரையில் இவ் வசதிகள் இல்லை. தனிப்பட்ட தரகர்கள் மூலமாகவும் நேரடியாகவுமே கால்நடைகளின் விற்பனை மற்றும் கொள்வனவுகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும் நியாயமான விலையைப் பெற முடியாதுள்ளதுடன் விற்பனையாளர்களும் கொள்வனவாளர்களும் தமது உடனடித்தேவைகளைத் நிறைவேற்ற முடியாத நிலையும் உள்ளது.

எனவே கால்நடை விற்பனை மற்றும் கொள்வனவுக்கு வசதியாக ஒவ்வொரு பிரதேசத்திலும் கால்நடைச் சந்தைகளை ஆரம்பிப்பதற்கு உள்ளூராட்சி அமைப்புகள் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*வைமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**- அ.பி.குணசீலன்.**

## இறந்தவரின் சடலத்தைப் பெற அலைந்து திரிந்து படாத பாடு

மானிப்பாய் வாசியாகிய 78 வயதுடைய ந.நாகேந்திரம் என்பவர் வயிற்றுப்போக்கு மற்றும் சிறுநீர் செல்ல மறுத்தல் போன்ற நோய் காரணமாக தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். சுமார் 7 நாள்கள் அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

தொடர்ந்து நோயாளியின் நிலைமையைக் கருத்தில் கொண்டு கடந்த 8.12.2000 ஆம் திகதி இரவு அங்கிருந்து ஆஸ்பத்திரி வாகனம் மூலம் அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அவரை 9.12.2000 ஆம் திகதி நள்ளிரவு 12.05 மணிக்கு அனுமதித்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதே சமயம் நோயாளி 9.12.2000 ஆம் திகதி காலை 8.45 ற்கு இறந்துள்ளார் என்று பதியப்பட்டுள்ளது.

இதற்கு விசாரணை தேவை என்ற பத்திரமும் நிரப்பப்பட்டு, விசாரணைக்குரிய காரணம் வைத்திய அறிக்கை செய்யப்படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் ஒரு கிழமையாக என்ன செய்தார்கள்?

தெல்லிப்பழை ஆஸ்பத்திரியின் அறிக்கையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஏற்காதா?

இதன் அடிப்படையில் நான் முன்வைக்கும் காரணம் இதுதான்.

நோயாளி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதற்கும் இறந்ததற்கும் இடையில் 24 மணித்தியாலம் இல்லை என்ற வாதம் பிழையானதாகும். உண்மையில் நோயாளி ஒரு வாரத்திற்கு முன்னரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு விட்டார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக யாழ்.ஆஸ்பத்திரியில் எத்தனையோ கஷ்டங்களை எதிர்நோக்கியும் மரண விசாரணை அதிகாரிகளின் வீட்டுக்கு அலைந்து திரிந்தும் விசாரணைகளை முடித்து அன்று (9.12.2000) பிற்பகல் 3.15 மணிக்கே உடலை பொறுப்பேற்க முடிந்தது.

இந்த நிலைமை வேறு ஒரு பொதுமகனுக்கும் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்திலேயே இதை எழுதுகின்றேன். எந்த ஓர் அதிகாரி மேலும் குறை காணுவதற்காக அல்ல என்பதை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றேன்.

எந்த ஒரு நோயாளியாகிலும் ஓர் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் வாகன மூலம் வேறு ஒரு வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டால் முதல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை வைத்தே 24 மணித்தியாலம் கணிக்கப்பட வேண்டும்.

மற்றது, முதலில் அனுமதிக்கப்படும் ஆஸ்பத்திரியின் வைத்திய அறிக்கை மற்றும் நோயாளி பற்றிய குறிப்பு போன்றவை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுவதில்லையா? அல்லது அவை ஏற்கப்படுவதில்லையா? இவற்றுக்கு காரணங்கள் ஏதும் உள்ளனவா?

*ஆஸ்பத்திரி ஒழுங்கை*
*மானிப்பாய்.*

**- இ.சாந்தகிருஷ்ணன்**

## குடாநாட்டில் தந்திச் சேவை ஒழிக்கப்பட்டு விட்டதா?

யாழ். மாவட்டத்தில் தற்போது தபால் சேவைகள் ஓரளவு திருப்திகரமான முறையில் நடைபெற்று வந்தாலும், தந்திச் சேவைகள் 1990 இலிருந்து இன்றுவரை எதுவித முன்னேற்றமும் காணாமல் நடைபெற்று வருகின்றன.

13ரூபா 50சதத்திற்கு முத்திரை ஒட்டி கடுகதி(**Express**) கடிதம் மூலம் அனுப்பப்படும் கடிதங்களும், வெளியூரிலிருந்து வரும் தந்திகளும் சாதாரண தபால் ஊழியர்களாலேயே விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் உரிய நேரத்தில், உரிய தகவல்களை சம்பந்தப்பட்டவர்கள் காலந்தாழ்த்தியே பெற்றுக்கொள்கின்றனர்.

யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை 1990 இலிருந்து யுத்த நிலையைக் காரணங்காட்டி ஐம்பதிற்கும் மேற்பட்ட நிரந்தர தந்தித்தூதுவர் கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு அவர்களின் கடமைகளும் தபால் ஊழியர்களே தத்தமது கடமையுடன் மேலதிகமாகச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இந்நடைமுறை கடந்த பத்து வருடங்களாக இங்கு நிலவி வருகின்றது.

யாழ். மாவட்டத் தபாலகங்களில் இத்தந்தித்தூதுவர் பதவிக்கான ஆளணி(**Cadre**) வெற்றிடமாகவே தொடர்ந்து இருந்துவருகின்றது. குறிப்பாக வலிகாமம் மேற்கில் வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை தபால் அலுவலகங்களில் இதே நிலைமை இருந்து வருவதால், இப்பகுதி பொதுமக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். மேலும் இக் குறிப்பிட்ட தபால் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதியும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

இந்நிலையை மாற்றி தந்தித்தூதுவர் பதவிகளை நிரப்பவும், யாழ். மாவட்டத்தில் உள்ள தபால் அலுவலகங்களுக்கு தொலைபேசி வசதிகளைச் செய்து கொடுக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உதவுவார்களா?

பொது மக்கள் தபால் தந்திச் சேவைகளினால் மேலும் பாதிக்கப்படாமல் சீரான சேவையை மக்களுக்கு வழங்க சம்பந்தப்பட்டவர்கள் விரைவில் நடவடிக்கை எடுப்பார்களா?

*சங்கானை.*

**'பாலநிலா'**

# இதோ! இதோ!
# லாலா சோப் சண்சயின் சோப்

**ஸ்தாபனத்தாரின் அதிர்ஷ்டத்தில் பங்கு கொள்ளுங்கள்**

மாணவ மாணவிகளே 1000 ரூபா வீதம் பரிசில்கள் 5 பேருக்கு வழங்கப்படும். மேல் உறை 10 சேகரித்து உங்கள் பெயர், பாடசாலை விலாசம் என்பவற்றை எழுதி உங்கள் வாடிக்கைக் கடைகளில் கொடுக்கலாம் அல்லது எமது வியாபார வாகனத்தில் கொடுக்கலாம். அல்லது லாலா தொழிற்சாலைக்கும் அனுப்பி வைக்கலாம்.

**லாலா சோப் தொழிலகம்**

அச்சுவேலி. (c/15023)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 - 03 - 1936

மறைவு 22 - 10 - 1999

**திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு**

திதி: 30.01.2001 செவ்வாய் (சஷ்டி)

**அடிசிற்கினியாளே அன்புடைய மாதே**
**பதி சொற்றவறாத பாவாய் – அடிவருடிப்**
**பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியே.**
**என்தூங்கு மென் கண் ணிரா!**

பிரிவால் துயருறும்:
**கணவன்,**
**மருமகன், மகள்,**
**பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

நிரந்தர முகவரி
*இல.1, திருமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

தற்காலிக முகவரி
*ஸ்ரான்லிக் கல்லூரி வீதி,*
*கச்சேரி கிழக்கு. யாழ்ப்பாணம்.*

(83408)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 26 - 10 - 1937

உதிர்வு 31 - 12 - 2000

**திருமதி பரிமளம் நடராசா**

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வானிலுறை தெய்வமே
மாதமோ ஒன்றாகின்றது நம்மனதிலே வேதனையோ
விலகவில்லை
வளமாக வாழ்கின்றோம். ஆனால் வழி சமைத்த நீயோ
இங்கில்லை
விழிகள் தேடும் இடமெல்லாம் உந்தன் விம்பம் தானே
தெரிகிறது

31.12.2000 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி பரிமளம் நடராசா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரிலும் தந்தி, தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**கணவர்,**
**பிள்ளைகள் மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

(83406)

## முதலாம் வருட குருபூசை

யாழ்ப்பாணம்,ஜன.30

கைதடி சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையாரின் முதலாம் வருட குருபூசை எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாகுட்டி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் "ஆத்மீக நெறியின் குரு வழிபாடு" என்னும் பொருளில் பேராசிரியர் நா.ஞானகுமாரன் கருத்துரை வழங்கவுள்ளார். (க-5)

## கலந்துரையாடல்

பளைப் பகுதியில் உள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 6ஆம் திகதி காலை 10 மணிக்கு தற்காலிகமாக மானிப்பாய் வீதியில் இயங்கும் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் தென்னந்தோட்ட உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பளைப் பிரதேச செயலர் தெரிவித்தார். (க-6)

## 44 பேர் சித்தி

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்புளோமா கற்கை நெறி முதலாம் வருட மாணவர்களது பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்படிப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 44 பேர் சித்தியடைந்துள்ளதாக யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-6)

## மாணவர்களுக்கு சத்துணவுப் பொதிகள்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வல்வெட்டித்துறை வடமேற்கு கிராமசேவை அலுவலர் பகுதியிலுள்ள பாலர் பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், கிராமசேவை அலுவலர் கே.சிவபாலசிங்கம், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் என்.மகேந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்குகிறார்கள். (க-109)

## விளையாட்டரங்கு அமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் கொட்டடியிலுள்ள தந்தை செல்வாபுரம் கந்தசுவாமி விளையாட்டரங்கு அமைப்பதற்காக 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து 2 லட்சம் ரூபாவையும் யாழ்.மாநகரசபை மேயர் என்.ரவிராஜ் ஒரு லட்சம் ரூபாவையும் இந்த மைதான புனரமைப்புக்கு ஒதுக்கியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கும், மாநகரசபை மேயருக்கும் தந்தை செல்வாபுர மக்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துள்ளனர். (க-5)

## சீருடை வழங்க நடவடிக்கை

சண்டிலிப்பாய்,ஜன.30

யாழ்.மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளிலும் மற்றும் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிலும் கடமையாற்றிவரும் ஊழியர்களுக்கு கடந்த 2000 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைகளை விரைவில் வழங்குவதற்கு யாழ். சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது.

கொழும்பிலுள்ள சுகாதாரத் திணைக்கள தலைமைப்பீடம் வெளியிட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆண்- பெண் பரிசாரகர்களுக்கும், ஆண்- பெண் சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் புதிய வடிவிலான சீருடைகள் வழங்கப்படவுள்ளன. (உ_135)


## வலி.தென்மேற்கு பிரதேச சபை நகர சபையாகும்?

வலி.தென்மேற்கு,ஜன.30

வலி.தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையை நகர சபையாக தரமுயர்த்துவதற்குரிய நடவடிக்கையை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை- பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்துவதற்கான திட்டங்களை நகர அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது. (உ_-185)

# ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு 1944 - 01 - 16

இறப்பு 2000 - 02 - 11

**அமரர் செல்லத்துரை சந்தனலிங்கம்**

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**- குடும்பத்தினர்.**

*கோப்பாய்.* (83398)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 09 - 05 - 1939

இறைவன் அடியில் 02 - 02 - 1998

**அமரர் கணபதிப்பிள்ளை ஜெகதீசன்**

( அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்க முன்னாள் தலைவரும், அரசாங்க கட்டட ஒப்பந்தக்காரரும்)

திதி: 30-01-2001

**மூன்றாடுகள் ஆனாலும் உங்கள் நினைவு எம்மை விட்டகலாது**

***உங்கள் ஆத்ம சாந்திக்கு***
***இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.***

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்

*'சிவவில்லா'*
*மானிப்பாய்.*

(83278)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 15 - 01 - 1944

அழிப்பு 10 - 02 - 2000

**திருமதி சின்னராசு இராசரத்தினம்**

திதி: சஷ்டி 30.01.2001

என் இதயக் கோயிலின் தீபம் அணைந்து
ஆண்டு ஒன்று ஆனதுவோ!
நேற்றுப் போல் இருக்குதம்மா உங்கள்
திருமுகம் பார்த்து
இன்னும் பல காலம் எம்முடன் சேர்ந்திருப்பீர்கள்
என்று எண்ணியிருந்தோமே அம்மா!
படைத்தவனுக்கோ பொறுக்கவில்லை
பறித்துவிட்டான் உங்களை எம்மிடமிருந்து

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

உங்கள் நினைவில்
மயிலன் இராசரத்தினம் (கணவர்)
பிள்ளைகளும், குடும்பத்தினரும்.

*நாவலடி,*
*உடுப்பிட்டி.*

(83313)

# கூட்டு இராணுவ அழுத்தங்களே புலிகள் பேச்சுக்கு வர காரணம்

## ரூபவாஹினிப் பேட்டியில் ஜனாதிபதி

கொழும்பு,ஜன.30

கூட்டிணைந்த இராணுவ அழுத்தங்களாலும், பிரிட்டன் தடை செய்யும் என்ற அச்சத்தினாலுமே புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர விருப்பம் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ரூபவாஹினி தொலைக்காட்சிக்கு நேற்று வழங்கிய பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

விடுதலைப் புலிகள் அமைப்பு எமது நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வது குறித்து தீர்மானிக்க விரும்பினால் நாம் பேச்சுவார்த்தைக்குத் தயார். எனினும் பிரிவினை குறித்தோ, ஈழத்தை அமைப்பது குறித்தோ பேச்சுவார்த்தை நடத்தத் தயாரில்லை.

பேச்சுவார்த்தை மூலம் முடிவைக் காணும்வரை சமாதானத்தை எட்டுவது சாத்தியமில்லை.

புலிகள் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதும் முடிப்பதும் குறித்துத் தெளிவான திகதிகளை அறிவிக்க வேண்டும். பேச்சுவார்த்தைகள் வெற்றியடைந்தால் யுத்தம் முடிவு பெறும். இல்லாவிட்டால் நாம் மேலும் போரைத் தொடர்வோம். நாம் அதற்குத் தயாராகவேயுள்ளோம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நோர்வே ஏற்பாட்டாளர்களை இனனும் சில தினங்களில் சந்திக்க விருப்பதாகவும் தனது நிலைப்பாடு குறித்து ஏற்கனவே அவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

சமாதானம் குறித்த அவரது நிலைப்பாடு தொடர்பாக புலிகளிடம் இருந்து பதில் வந்ததா எனக் கேட்கப்பட்ட போது சில சாதகமான சமிக்ஞைகள் கிடைத்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தைத் தடுப்பது தொடர்பான பிரிட்டனின் புதிய சட்டத்தின் மூலம் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டால் ஐரோப்பாவில் தமது நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என அவ்வியக்கம் அஞ்சுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கண் மூடித்தனமாக பேச்சுவார்த்தைகளுக்கு அரசு இணக்கப் போவதில்லை. 1994 இல் புலிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையை அவர்கள் முறித்துக் கொண்டார்கள் எனவும் ஜனாதிபதி இப் பேட்டியில் குறிப்பிட்டார். (ஐ)

# ஒரு கோடி ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

வலி.தென்மேற்கு,ஜன.30

வலி.தென்மேற்கு பிரதேச சபை மூலம் 2000 ஆண்டில் ஒரு கோடி ரூபா செலவில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொண்டுள்ளதாக சபையின் தலைவர் வெ.அ.ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் வீதிகள், புதிய கட்டடங்கள், சனசமூக நிலைய புனரமைப்பு வேலைகள், கலாசார மண்டபங்கள், சந்தை அமைத்தல் போன்ற அபிவிருத்தி வேலைகள் இந்நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கூறினார்.

சபைநிதி, பிரமாண அடிப்படையிலான மூலதனநிதி, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டநிதி, குறித்தொதுக்கப்பட்ட மாகாண நிதி போன்றவற்றின் மூலமே இந்தப் பணிகள் இடம் பெற்றுள்ளன. (க-185)

# நாட்டைக் குட்டிச்சுவராய் மாற்றுகின்றார் ஜனாதிபதி

## சாடுகின்றார் ரணில்

கொழும்பு,ஜன.30

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கிக் கொண்டிருக்கின்றார். தொடர்ந்தும் அவர் பதவியில் இருந்தால் நாடு மேலும் பாழாகி விடும். எனவே அவர் உடனடியாகப் பதவி துறந்து நாட்டை அழிவில் இருந்து பாதுகாக்க உதவ வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பு சி.ஆர்.அன்ட்.எவ்.சி. மைதானத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

பொருளாதார அடிப்படைகள் எதுவும் இல்லாமல் ரூபாவின் பெறுமதியை மிதக்க விடுவது பெரும் அழிவுக்கே வழிவகுக்கும்.

பெறுமதியை மிதக்க விடுவதற்கு சரியான நிதிச் சூழல் இருக்க வேண்டும் ஸ்திரமான பொருளாதாரம் இருந்தால்தான் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வேலைவாய்ப்பு வளங்களும் வருமான அதிகரிப்பும் ஏற்படும். இந்த அடிப்படைகள் எதுவுமே இன்று இல்லை.

தேயிலை, வெளிநாட்டு வேலை, ஆடை உற்பத்தி மாத்திரமே இன்று இயங்குகின்றன. முதலீட்டாளர்களின் நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம் - என்றும் ரணில் தெரிவித்தார். (ஐ)

# யுத்த நிறுத்தம் குறித்து சமாதானப்பேரவை அறிக்கை

கொழும்பு,ஜன.30

புலிகளின் போர்நிறுத்த நீடிப்பு அறிவிப்புக்கு அரசும் சாதகமாகப் பதிலளித்து போர் நிறுத்தத்துக்கும் அரசியல் தீர்வுக்குமான ஒரு சூழ் நிலையை உருவாக்க வேண்டும்.

இவ்வாறு தேசிய சமாதானப் பேரவையின் வெகுஜன ஊடகப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீண்ட காலமகத் தொடரும் இராணுவ மோதல்கள் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இந்தப் போர்நிறுத்த அறிவிப்பு ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பமாக அமைகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5-7)

# இயற்கையை வெல்வதில் தோற்கும் மனித முயற்சி

விஞ்ஞான வளர்ச்சியால் இயற்கையை வெல்ல மனிதன் முயன்று கொண்டே இருக்கிறான். ஆனால் இயற்கையின் சீற்றத்திற்கு அவன் தப்ப முடிவதில்லை.

குஜராத் மாநிலத்தில் பூமியதிர்ச்சி தாக்கிய சம்பவம் குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறிய வார்த்தைகள் இவை. குஜராத்துக்கு மட்டுமன்றி உலகம் முழுவதுக்கும் பொருந்துகின்றன.

பூமியதிர்ச்சி ஏற்படுவதை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட போதும் இத்தகைய பேரழிவுகள் தடுக்க முடியாதவையாகின்றன.

குஜராத்தில் பூமியதிர்ச்சி நிகழ்வதற்கு ஒருநாள் முன்பாகவே வாடியா புவியியல் ஆய்வு மையத்தில் நில அதிர்வு வரைபடக் கருவிமூலம் பூமிக்குள் சில மாற்றங்கள் நிகழ்ந்ததை விஞ்ஞானிகள் உணர்ந்தனர்.

ஆனால் எப்போது, எங்கு நிலநடுக்கம் ஏற்படும் என்பதை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

காரணத்தைத் தெரிந்துகொள்ள பூமியதிர்ச்சி எப்படி ஏற்படுகிறது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

பல லட்சம் கோடிவருடங்களுக்கு முன்னர் நெருப்புக் கோளமாக இருந்த பூமி மேற்பரப்பில் இருந்து படிப்படியாகக் குளிர்ந்தது.

இதானல் பல்வேறு வகையான தன்மைகள் கொண்ட மண் மற்றும் பாறைகள் அடுக்கடுக்காக உள்ள தரைப்பகுதி உருவாகியது.

இன்றும் பூமியின் மையத்தில் 'லாவா' எனப்படும் எரிமலைக்குழம்பு கொதித்துக்கொண்டே உள்ளது.

இந்தத் தன்மையினால் பூமியின் உட் பகுதியில் அழுத்த வேறுபாடுகள் தோன்றுகின்றன. ஒன்றுடன் ஒன்று தொடர்பற்ற - இடைவெளிகள் உள்ள - பாறை அடுக்குகள் அழுத்த மாறுபாடால் நகர்கின்றன.



குஜராத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் தாக்கம் பாகிஸ்தான் வரை பரவியிருந்தது. அங்குள்ள ஹைதராபாத் நகரில் பூகம்பத்தால் தகர்ந்த கட்டடத்தில் மீட்புப் பணிகள் இடம்பெறுவதைப் படத்தில் காணலாம்.

இப்படி உட்புறத்தில் ஏற்படும் நகர்வுகளின தன்மையைப் பொறுத்து மேற்புறத்தில் உருவாகும் தாக்கங்களின் பாதிப்புகள் அமைகின்றன.

குஜராத்தின் சதுப்பு நிலத் தன்மையால் பூமியதிர்ச்சி விளைவித்த தாக்கம் அதிகமாக உள்ளது.

இதேவேளை -

குஜராத்தில் பாரிய பூகம்பம் ஏற்படும் என்பது குறித்து முன்னரே எச்சரித்திருந்த புதுடில்லி பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் டாக்டர் சௌத்ரா முகர்ஜி நிலநடுக்கம் வேறொரு காரணத்தாலும் உருவாவதாகத் தெரிவித்துள்ளார்.

சூரியனின் வெளிப்பரப்பில் இருந்து வெளிவிடப்படும் அளவு கடந்த ஆற்றல் பூமியின் காந்தப்புலத்தைப் பாதிக்கிறது. இப்பாதிப்பினால் பூமியின் உட்புறத்தில் அமைந்துள்ள பாறை அடுக்குகள் நகர்த்தப்படுகின்றன.

இதனாலேயே நிலநடுக்கம் ஏற்படுகிறது.

இவ்வாறு தெரிவித்துள்ள முகர்ஜீ, இந்தியாவில் ஜகன்பூர் மற்றும் புதுடில்லி ஆகிய இடங்களில் கடுமையான பூமியதிர்ச்சி ஏற்பட உள்ளதாகவும் எச்சரித்துள்ளார்.

நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்தியாவில் நிலநடுக்கங்களால் சேதங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டென்று விஞ்ஞானிகள் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

தாக்கத்தின் அளவைக் கொண்டு இந்தியாவை 5 மண்டலங்களாகவும் அவர்கள் பிரித்துள்ளனர்.

அவற்றில் குஜராத்தின் கஜ் பகுதி, வடகிழக்கு காஷ்மீர், ஹிமாசல் பிரதேசம் மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் ஆகியவையும் அதிக பாதிப்படையக் கூடிய 5ஆவது மண்டலத்தில் அடங்குகின்றன.

விஞ்ஞானிகள் இப்பகுதிகளில் 8 ரிச்டர் அளவு வரையிலான நில நடுக்கங்கள் ஏற்படக் கூடும் எனவும் எச்சரித்திருந்தனர்.

இதனால் இரவு பகலாக இயங்கிக் கொண்டிருக்கும் நில அதிர்வு வரைபடக்கருவிகள் இப்பகுதிகளில் பொருத்தப்பட்டன.

இக்கருவியில் சுருள்தாளில் சிறு அதிர்வுகளையும் கிரகித்துக் கொள்ளும் முனை ஒன்று தொட்டபடி இருககும்.

பூமியின் உட் புறத்தில் பாறைப் படிவங்கள் அசைந்தால் அதனைக் கிரகித்து நேர் கோடாக வரைவதை விடுத்து அதிர்வின் அளவுற்கேற்ப முனை மேலும் கீழுமாக நடுக்கக் கோடுகளை வரையும்.

குஜராத்தில் பூமியதிர்ச்சி பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முதல் நாள் நில அதிர்வு கருவி மாற்றங்களைக் காட்டியுள்ளது.

ஆனாலும் பூமியதிர்ச்சியை முன் கூட்டியே கணிக்க புவியியல் ஆய்வு மைய பணியாளர்களால் முடியவில்லை.

குறுகிய கால முன்கணிப்பும், நீண்ட காலத் தற்காபபுத் திட்டங்களும் இருந்திருந்தால் குஜராத்தில் இழப்புகளை தடுத்திருக்க முடியும் என்று இப்போது விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

விஞ்ஞானிகள் இப்படிக் கூறிக் கொண்டிருக்க, மணல் பாங்கான புவியியல் அமைப்பைக் கொண்டுள்ள குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் பூமியதிர்ச்சி குறித்து கூடிய அவதானம் செலுத்தியிருக்க வேண்டும் என்று குரல்கள் எழுந்துள்ளன.

மீட்புப் பணிகள் முடிவடையும் போது இந்தக் குரல்கள் மேலும் பலமாக ஒலிக்கக்கூடும்.

### அணுகுண்டு சோதனை காரணமா?

அத்துடன் இந்தியா நிலத்தின் அடியில் நடத்திய அணுகுண்டுச் சோதனைகள் பாறை நகர்வுகளுக்கு வழிவகுத்ததாலேயே 6.9 ரிச்டர் அளவு கொண்ட பாரிய பூமியதிர்ச்சி ஏற்பட்டதாகச் சிலர் வாதிடுகின்றனர். ஆனாலும் இந்த வாதம் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்படவில்லை.

1935 ஆம் ஆண்டு பூமியதிர்ச்சியை அளவிடும் அளவீட்டு முறையை சார்லஸ் ரிச்டேர் என்பவர் அறிமுகப்படுத்தினார்.

அன்று முதல் பூமியதிர்ச்சியை ரிச்டேர் அளவில் அளந்துவரும் விஞ்ஞானிகள் மற்றொரு உண்மையைக் கூறியுள்ளனர். உலகில் தினமும் 2 ரிச்டர் அளவுக்கும் குறைவான - சேதங்களை ஏற்படுத்தாத - சுமார் ஆயிரம் நிலநடுக்கங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதே அந்த உண்மையாகும்.




குஜராத் பூமியதிர்ச்சி

இப்படியான சிறிய நடுக்கங்களிடையேதான் திடீரென பாரிய பூமியதிர்ச்சிகளும் ஏற்படுகின்றன.

1906 ஆம் ஆண்டு பசுபிக் சமுத்திரத்தின் அருகில் கொலம்பியா - ஈக்குவேடர் நாடுகளின் எல்லையிலும்

1933 ஆம் ஆண்டு ஜப்பானிலும் ஏற்பட்ட பூமியதிர்ச்சிகளே உலகில் மிகப்பலமானவையாகக் கருதப்படுகின்றன.

இந்த இரு பூமியதிர்ச்சிகளும் 8.9 ரிச்டர் அளவை கொண்டிருந்தன.

ஆனாலும் இவற்றை விட குறைந்த அளவைக்கொண்டிருந்த குஜராத் பூமியதிர்ச்சியில் அதிக உயிர்ச்சேதங்கள் ஏற்பட இந்தியாவின் அடர்த்தியான மக்கள் தொகையும், வறுமையுமே காரணம் என்று கூறப்படுகிறது.

குஜராத்தில் பூமியதிர்ச்சி ஏற்படுத்திய இந்த மோசமான - மறக்க முடியாத - சோகச்சம்பவத்தால் எச்சரிக்கை அடைந்துள்ள இந்திய அரசு, நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதியில் அமைந்துள்ள தலைநகர் புதுடில்லியில் பூமியதிர்ச்சியைத் துல்லியமாகவும், விரைவாகவும் மதிப்பிடும் 'டிஜிட்டல்' நில அதிர்வு தொலை உணர்வுக்கருவிகளை நிறுவமுடிவு செய்துள்ளது.

### குஜராத் பூகம்பம் அழிவுகள் தடுத்திருக்கக் கூடியனவா?

ஆனாலும் பிரதமர் வாஜ்பாயின் வார்த்தைகளை இயற்கை நிரூபிப்பதை தடுக்க முடியாது என்றே தோன்றுகிறது. ▲

# சின்னஞ்சிறு விளம்பரம்

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதங்களிலும் மணமக்கள் உண்டு. புகைப்படம், ஜாதகங்களுடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, பிறவுண் றோட் சந்தி, யாழ்ப்பாணம். (83451)

### படிவம்

நில அளவையாளர் சேவையில் வகுப்பு III தரம் III பதவிக்கான படிவம் விற்பனையாகின்றது. விவரம் 26.01.2001 வர்த்தமானியில் கீழ் வரும் முகவரியில் பார்வையிடலாம். நாயகபாலன், மானிப்பாய். (83452)

### தவறிவிட்டது

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியை திருமதி பராசக்தி சிவசண்முகம் என்பவரது தொழில் அ.அட்டையும், வவுனியா தேசிய சேமிப்பு வங்கி கணக்குப் புத்தகமும் மற்றும் வேறு சில ஆவணங்களும் மஞ்சள் நிற பேசுடன் 24.01.2001 அன்று பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சித்தன்கேணி போகும் வழியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலைய காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (83454)

### விற்பனைக்கு

JIALIN - C70 (3000km ஓடியது) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி.மணிவண்ணன், இராமலிங்கம் வீதி (முடமாவடி), திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (83537)

### வீடு விற்பனைக்கு

யாழ்.நகரில் நான்காம் குறுக்குத் தெருவில் TRRO இந்குப் பக்கத்தில் மிகவும் நல்ல நிலையில் உள்ள இரண்டு வீடுகள் உடன் விற்பனைக்கு உண்டு. இரண்டினதும் விலை ரூபா 18 இலட்சம். பேசித்தீர்மானிக்கலாம். தொடர்பு: R.V.கந்தசாமி, 70(34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (83391)

### படிவம்

**நில அளவையாளர் சேவைக்கு ஆள்சேர்த்தல்**
விண்ணப்ப முடிவு திகதி
26.02.2001
**கணக்காளர் போட்டிப் பரீட்சை**
விண்ணப்ப முடிவு திகதி
26.02.2001
விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன.
**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
(C/15046) யாழ்ப்பாணம்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ் கந்தர்மடம், அன்னசத்திர ஒழுங்கை வேம்படி சித்தி விநாயகர் ஆலய நூதன உற்சவ மூர்த்தி பிரதிஷ்டா மகா கும்பா பிஷேகம் எதிர்வரும் 8ஆம் திகதி காலை 8 மணிக்கு இடம்பெறும்.

புதிதாக வடிவமைக்கப்பெற்ற உற்சவ மூர்த்திக்கு முதல் நாள் தைப்பூசமன்று மாலை 4 மணிக்கு பாலறுகு சாத்துதல், யாகபூசை நடைபெறும்.

★ ★ ★

இணுவில் மஞ்சத்தடி அரசோலை விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பா பிஷேகம் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.36மணி தொடக்கம் 10.35 மணிவரையுள்ள சுபவேளையில நடைபெறும்.

3ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு இடம்பெறும். (க-152)

## கலைநிகழ்ச்சிகள் நடத்த ஏற்பாடு

வலி.தென்மேற்கு,ஜன.30

நவாலியூர் கலாபூசணம் நா.செல்லத்துரை கலையரங்கில் மாதாந்தம் கலை நிகழ்ச்சிகள் நடத்த முரசொலி சனசமூக நிலைய அமைப்பாளர் எஸ்.வி.பாலநாதன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

நாடகம் அரங்கியல் துறையில் ஆர்வம் கொண்ட இளைஞர், யுவதிகள் மூலம் நாடகம் பயிற்றுவிக்கப்பட்டு இங்கு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. (க-185)

## மூக்குக் கண்ணாடிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணம் றோட்டறிக்கழகத்தினால் லயன்ஸ் கழகங்களின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.பத்மநாதனிடம் கண் சத்திர சிகிச்சையின் பின்னர் பாவிக்கப்படும் கண்ணாடிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கண் சத்திரசிகிச்சையின் பின்னர் பாவிக்க வேண்டிய கண்ணாடி அளவுகளை வைத்திருப்போர் தீவக லயன்ஸ் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (க-5)

## யாருடைய சைக்கிள்?

அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்கத்தில் உரிமை கோரப்படாத நிலையில் சைக்கிள் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

ஹுமாலா ரகத்தைச் சேர்ந்த இந்த சைக்கிள் கடந்த பல மாதங்களாக சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சைக்கிள்கள் யாழ்.நகர் தனியார் பஸ் நிலையத்தில் கைவிடப்பட்டிருந்தது. (க-11)

## தென்னம் தோட்ட உரிமையாளர் கூட்டம்

தென்மராட்சி, ஜன.30

பளைப் பிரதேசத்தில் உள்ள தென்னம் தோட்டங்களின் உரிமையாளர்களுக்கான கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி 6ஆம் திகதி காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் உள்ள பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (ஜ-117)

## தேவை

மருந்து விற்பனை
உதவியாளர் தேவை.
ஆங்கில அறிவுடன் கூடிய
அருகில வசிப்பவர்கள்
விரும்பத்தக்கது
நேரில் வரவும்.
**வாகி பாமசி**
பலாலி வீதி,
கோண்டாவில் சந்தி.
(83462)

சம்பளத்துடனான லீவு அனுமதி ரத்து:

# இடைநடுவில் பட்டப்படிப்பை கைவிட்ட ஆசிரியர்கள்!

அச்சுவேலி, ஜன.30

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்ட ஆசிரியர்கள் சம்பளத்துடன் கூடிய படிப்பு லீவு அனுமதி கிடைக்காமையினால் இடைநடுவில் பட்டப்படிப்பைக் கைவிட்டு ஏமாற்றத்துடன் மீண்டும் பாடசாலைகளில் கடமை ஏற்றுள்ளனர்.

குறிப்பிட்ட சில பாடத்துறையில் வெளிவாரியாகச் சேர்ந்து முதல் பட்டத் தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய படிப்பு லீவு அனுமதி வழங்கி உள்வாரியாக பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்வதற்கு வசதி செய்யப்பட்டு வந்தது.

இந்தத் திட்டத்தின் கீழ் பௌதிக விஞ்ஞான பாடத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு சம்பளமற்ற படிப்பு லீவு அனுமதி வழங்கி இருந்தது.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் ஆரம்பமான கல்வி நெறியில் பதிவு செய்து பல்கலைவக்கழக விரிவுரைகளில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் பாடசாலைக்குத் திரும்பி கடமை ஏற்கும் வரை உள்ள காலம் சம்பளமற்ற லீவாக கணிக்கப்பட்டு அவர் களின் சொந்த லீவில் கணிப்பீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. (க-11)

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08 - 07 - 1955 | 24 - 01 - 1988 |

## திருமதி காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி

(விஞ்ஞான ஆசிரியை, மன்.காக்கையன்குளம் மகாவித்தியாலயம்)

திதி:- 30-01-2001 செவ்வாய்க்கிழமை

**அமரர் பண்டிதர் க.சபாஆனந்தா B.A, BOL**
**அமரர் திருமதி அன்னம்மா ஆனந்தர்**
*ஆகியோரின் கனிஷ்ட புத்திரி.*

அன்று மகிழ்ந்து சுமந்து நொந்து பெற்று
சீராட்டி வளர்த்த நீ
இன்று வாழி!! சொல்ல இல்லை
இனி நீ இறையடியிலிருந்து
வளர்க!! வாழி!! சொல்ல
நாம் உயர
நீ சாந்தியடைய இறைஞ்சுகின்றோம்.

கணவன்
மகன்: த.கோகுலன்,
மகள்மார்: கஸ்தூரி, புராதனி,
சகோதரர், சகோதரி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*'ஸ்ரீ சாலினி'*
*கே.கே.எஸ்.வீதி,இணுவில்.*
**T.P. 070-212367**

# SKANDAVARODAYA COLLEGE INTER HOUSE

## ATHLETIC MEET - 2001

Time: **31-01-2001 Wednesday 1.30 p.m.**
Venue: **Skanda Stadium**
President: **Mr.K.Sivaji** (Principal)
Chief Guest: **Mr.S.Paramanathan**
(Former Assistant Secretary, District Development Council & U.N.Project Co-Ordinator)

Special Guest: **Mr.A.Dhatparananthan** (A. D. E. Uduvil Division)
**Mr.V.Balasingam** (A. D. E.Physical Education.)
**Mr.E.Ravindran**
(Northern Provincial Office, Bank of Ceylon, Colombo.)
**Mr.K.Buvanendranathan**
(Former Deputy Principal - Skanda)

Prize Distribution: **Mrs.Sinnathangam Paramanathan**
(Former Secretary mathematics - Textbooks Educational Publications Department)

*All are cordially invited*

*PRINCIPAL, STAFF, STUDENTS.*
Old Students' Association,
School Development Society.

**Skandavarodaya College,**
**Kanderodai, Chunnakam.** (83409)

# மரண அறிவித்தல்

## செல்வன் நவரத்தினம் ஜனார்த்தனன்

பலாலியைப் பிறப்பிடமாகவும், கரம்பொன் மேற்குஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஜனார்த்தனன் (28-01-2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி நவரத்தினம் - நாகநந்தினி ஆகியோரின் அன்புப் புதல்வனும், ஆரணி, விஜித் (கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற மாவை சுப்பிரமணியம் மற்றும் அன்னமுத்துவின் பேரனும் இராசகுலேந்திரன் (செல்வன்.சுவிஸ்), அம்பிகாதேவி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29-01-2001)திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கரம்பொன் மேற்கு,*
*சண்முகநாத வித்தியாலயம் அருகில்,*
*ஊர்காவற்றுறை.*

தகவல்:
சு.அன்னமுத்து
(பேர்த்தி)

(83545)

# "விண்ணுலக ஆனந்த வாழ்வில்"

**ஒன்பதாம் ஆண்டு**



| பூவுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 30 - 04 - 1914 | 19 - 01 - 1992 |

**கபிரியேல் இராயப்பு**

மக்களைச் செல்வமாய்
மதித்து வளர்த்த
தக்க குணத்துத்
தந்தையே மறவோம்.

**முதலாம் ஆண்டு**



| பூவுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 07 - 04 - 1924 | 30 - 01 - 2000 |

**இராயப்பு மரியம்மா**

நேயமும் அன்பும்
நிறைந்த நெஞ்சினால்
தாயெனக் காத்த
தெய்வமே மறவோம்.

**முதலாம் ஆண்டு**



| பூவுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 09 - 01 - 1945 | 25 - 01 - 2000 |

**இராயப்பு அந்தோனிப்பிள்ளை**
(அன்ரனி)

அண்ணனாய் அமைந்து
அன்பு காட்டிப் பண்புடன்
நல்வழி காட்டிய
தெய்வமே மறவோம்.

"உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைமகன் யேசுவிடம் பிரார்த்திக்கின்றோம்"

தகவல்:
இ.யேசுதாசன்.
*52, இராசாவின் தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

(C/15045)

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 30

இம்மாதம் 27 ஆம் திகதி வரையும் வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டோரின் இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**மருதங்கேணி**

(176303ஏ), (176303பி), (176303சி),

**நல்லூர்**

(174750ஏ), (174750பி),
(174750சி), (176008ஏ),
(176008பி), (176008சி),
(176008டி), (176778ஏ),
(176778பி), (178759ஏ),
(178759பி), (178811ஏ),
(178815ஏ), (178815பி),
(178881ஏ), (178881பி),
(178881சி), (178888ஏ),
(178888பி), (178888சி),
(178888டி), (178888ஈ),
(178888எவ்), (17888ஏசி),
(178901ஏ), (178901பி),
(179071ஏ), (179071பி),
(179219ஏ), (179229ஏ),

**பருத்தித்துறை**

[132591ஏ], [132591பி],
[140262ஏ], [140262பி],
[140262சி], [140320ஏ],
[151248ஏ], [151248பி),
[151248சி], [151248டி],
[151248ஈ], [151248எவ்],
[151369ஏ], [151369பி],
[151369சி], [151369டி],
[153796ஏ], [154721ஏ],
[154721பி], [157994ஏ],
[157994பி], [157994சி],
[157995ஏ], [157995பி],
[158021ஏ], [158021பி],
[158021சி], [158318ஏ],
[158403ஏ], [160290ஏ],
[160290பி], [160306ஏ],
[160306பி], [160307ஏ],
[160307பி], [160329ஏ],
[160329பி], [160377ஏ],
[160377பி], [162052ஏ],
[162052பி], [162052சி],
[162052டி], [162449ஏ],
[167142ஏ], [167142பி],
[167278ஏ], [167278பி],
[167306ஏ], [167306பி],
[167837ஏ], [167837பி],
[167988ஏ], [168150ஏ],
[168152ஏ], [168152பி],
[168157ஏ], [169545ஏ],
[169712ஏ], [169754ஏ],
[172141ஏ], [172142பி],
[172161ஏ], [172161பி],
[172161சி], [172218ஏ],
[172394ஏ], [172394பி],
[172394சி], [172456ஏ],
(172535ஏ], [172535பி],
[172535சி], [174294ஏ],
[174546ஏ], [174546பி],
[174577ஏ], [174577பி],
[174620ஏ], [174623ஏ],
[174623பி], [174624ஏ],
[174624பி], [174633ஏ],
[174665ஏ], [174665பி],
[174665சி], [174682ஏ],
[174682பி], [176019ஏ],
[176026ஏ], [176026பி],
[176026சி), [176032ஏ],
[176032பி], [176038ஏ],
[176046ஏ], [176046பி],
[176046சி], [176046டி],
[176047ஏ], [176048ஏ],
[176048பி], [176057ஏ],
[176057பி], [176057சி],
[176109ஏ], [176109பி],
(176109சி), (176906டி),
(176109ஈ), (176163ஏ),
(176199ஏ), (176199பி),
(179199சி), (176199டி),
(176204ஏ), (176204பி),
(176222ஏ), (176226பி),
(176227ஏ), (176290ஏ),
(176290பி), (176290சி),
(116472ஏ), (176472பி),
(176484ஏ), (176484பி),
(176484சி),
(176484டி), (176484ஈ),
(176484எவ்), (176474ஜி),
(177561ஏ), (177561பி),
(180410ஏ), (180418ஏ),
(180431ஏ), (180431பி),
(180431சி), (180431டி),
(180464ஏ), (180596ஏ),

**சண்டிலிப்பாய்**

(178530ஏ), (178530பி),
(178572ஏ), (178660ஏ),
(178681ஏ), (178696ஏ),
(178696பி), (178713ஏ),
(178849ஏ), (179026ஏ),
(179056ஏ), )279076ஏ),
(179076பி), (179076சி),
(179084ஏ), (179161ஏ),
(179162ஏ), (179234ஏ),
(179234பி).

**தெல்லிப்பழை**

(160694ஏ), (176739ஏ),
(176739பி), (176797ஏ),
(178801ஏ), (178801பி),
(178880ஏ), (179016ஏ),
(179025ஏ), (179032ஏ),
(179032பி), (179054ஏ),
(179267ஏ), (179267பி),
(179267சி),

**உடுவில்**

(169020ஏ), (178748ஏ),
(178749ஏ), (178750ஏ),
(178761ஏ), (178761பி),
(178852ஏ), (178852பி),
(178870ஏ), (178883ஏ),
(179029ஏ), (179029பி),
(179159ஏ), (179159பி),
(179276ஏ),

**சங்கானை**

(176802ஏ), (176802பி),
(178604ஏ), (178615ஏ),
(178788ஏ), (178788பி),
(179132ஏ), (179356ஏ),
(179356பி).

**சாவகச்சேரி**

(155914ஏ), (155914பி),
(155914சி), (165003ஏ),
(165003பி), (165415ஏ),
(165415பி), (165415சி),
(169763ஏ), (169763பி),
(169883ஏ), (169883பி),
(174579ஏ), (174579பி),
(180417ஏ), (180417பி),
(180417சி.

**கரவெட்டி**

(143660ஏ), (146154ஏ),
(146696ஏ), (146696பி),
(150961ஏ), (150961பி),
(151274ஏ), (151274பி),
(151500ஏ), (151500பி),
(151500சி), (151501ஏ),
(151501பி), (151501சி),
(153790ஏ), (154759ஏ),
(154992ஏ), (154992பி),
(154992சி), (154992டி),
(158131ஏ), (158131பி),
(158131சி), (158131டி),
(158149ஏ), (158149பி),
(158149சி), (158223ஏ),
(158334ஏ), (160186ஏ),
(160186பி), (160244ஏ),
(160284ஏ), (160284பி),
[160284சி], [160284டி],
[162070ஏ], [162070பி],
[162384ஏ], [162384பி],
[162384சி], [164662ஏ],
[164874ஏ], [165093ஏ],
[165250ஏ], [165250பி],
[165292ஏ], [165292பி],
[165297ஏ], [165317ஏ],
[165317பி], [165317சி],
[165317டி], [165424ஏ],
[167219ஏ], [167219பி],
[167287ஏ], [167427ஏ],
[167795ஏ], [167795பி],
[167795சி], [167795டி],
[167795ஈ], [167795எவ்],
[167933ஏ], [167933பி],
[168020ஏ], [168030ஏ],
[168037ஏ], [168037பி],
[168037சி], [168037டி],
[169516ஏ], [169632ஏ],
[169632பி], [169632சி],
[169708ஏ], [169737ஏ],
[169737பி], [169737சி],
[169737டி], [169737ஈ],
[169737எவ்], [169745ஏ],
[169808பி], [169808சி],
]169855ஏ], [169867ஏ],
[169867பி], [169870ஏ],
[169870பி], [169870சி],
[169870டி], [169901ஏ],
[169901பி], [169901சி],
[169901டி], [172142ஏ],
[172210ஏ], [172245ஏ],
[172311ஏ], [172405ஏ],
[172405பி], [172405சி],
[172484ஏ], [172617ஏ],
[174319ஏ], [174385ஏ],
(174390ஏ), (174440ஏ),
(174452ஏ), (174452பி),
(174458ஏ), (174522ஏ),
(174522பி), (174547ஏ),
(174547பி), (174547சி),
(174550ஏ), (174550பி),
(174559ஏ), (174559பி),
(174578ஏ), (174609ஏ),
(174636ஏ), (174650ஏ),
(174650பி), (174650சி),
(174650டி), (174652ஏ),
(174652பி), (174655ஏ),
(174655பி), (174655சி),
(174655டி), (174664ஏ),
(174678ஏ), (174678பி),
(174681ஏ), (174681பி),
(174684ஏ), (174684பி),
(174685ஏ), (174685பி),
(174689ஏ), (174698ஏ),
(174698)பி, (174713ஏ),
(174713பி), (174713சி),
(174713டி), (174713ஈ),
(176020ஏ), (176020பி),
(176020சி), (176020டி),
[176027ஏ], [176038பி],
[176043ஏ], [176045ஏ],
(176045பி), (176045சி),
(176052ஏ), (176121ஏ),
(176138ஏ), (176158ஏ),
(176158பி), (176180ஏ),
(176190ஏ), (176200ஏ),
(176200பி), (176200சி),
(176200டி), (176200ஈ),
(176200எவ்), (176239ஏ),
(176308ஏ), (176308பி),
(176308சி), (177518ஏ),
(177695ஏ), (177695பி),
(177697ஏ), (177697பி),
(177976ஏ), (177976பி),
(177979ஏ), (177979பி),
(177979சி), (178008ஏ),
(178008பி), (180399ஏ),
(180899பி), (180400ஏ),

(ஐ — 10 — 15)

## புகையிலைச் செய்கை இம்முறை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். குடாநாட்டில் இந்த ஆண்டு புகையிலைக்குப் பெரும் கிராக்கி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்முறை புகையிலைப் பயிர் நோய்த் தாக்கத்திற்குள்ளாகி இருக்கிறது. கால நிலை மாற்றம் மற்றும் அடிக்கடி பெய்யும் மழையினால் புகையிலைப் பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால் புகையிலையின் விலை உயரக் கூடிய சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

இதேவேளை பச்சை மிளகாயின் விலை திடீரென சரிந்துள்ளது. திருநெல்வேலிச் சந்தையில் ஒரு கிலோ மிளகாய் 15 ரூபாவாக விற்கப்படுகிறது. (க—17)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, ஜன. 30

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 'விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியின் அரை இறுதி ஆட்டம் நாளை புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். [க-86]

★ ★ ★

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான [அரை இறுதி] எல்லே விளையாட்டுப் போட்டி இன்று செவ்வாய்க் கிழமை அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:

★ கொக்குவில் மத்திய சன சமூக விளையாட்டுக்கழகம் எதிர் அரியாலை சாந்தி விளையாட்டுக்கழகம்.

★ அரியாலை ஐக்கியவிளையாட்டுக்கழகம் எதிர் திருநெல்வேலி கலாமன்ற விளையாட்டுக்கழகம். [க-86]

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 30

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அவசர கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு பழம் றோட், கந்தர்மடத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. [க-10]

★ ★ ★

இளாலி கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதியில் உள்ள பளைப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் என்று கிராம அலுவலர் சி. பாலசுந்தரம் அறிவித்துள்ளார். (க-117)


## பகிரங்க அறிவித்தல்

பருத்தித்துறை இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள சலுசலா புடைவையகம் என்னும் வியாபார நிலையத்தில் உள்ள பொருள்கள், தளபாடங்கள் ஆகியவற்றை உரியவரிடம் விலைக்குப் பெற்றுக் கொண்டேன். இந் நிலையத்துடன் முன்பு இருந்த கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளி அல்ல என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன்.

செ. கண்ணதாஸ்
சலுசலா புடைவையகம்.
பஸ் நிலையம், பருத்தித்துறை.

[சி/15051]



## கண்ணீர் அஞ்சலி

எமது மரக்கூட்டுத்தாபன களஞ்சியப்பொறுப்பாளர்

**வல்லிபுரம் மாணிக்கலிங்கம்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு வேதனை அடைவதோடு அவரின் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச முகாமையாளரும்,
பணியாளர்களும்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
யாழ். பிரதேச முகாமையாளர் காரியாலய
நல்லூர் விற்பனை நிலையம்.

[83464]



## கண்ணீர் அஞ்சலி

எமது வடமராட்சிக் கல்வி வலயத்தில் விவசாய கல்வி ஆலோசகராகக் கடமையாற்றும்

திரு. அ. கிருபானந்த மனுநீதி அவர்களின் பாசமிகு தந்தையார்

**சின்னையா அப்புத்துரை**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் வேதனையடைவதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவர்தம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்
வலயக் கல்வித் திணைக்களம்.

வடமராட்சி,
புலோலி. (சி/15050)



## வீடியோ விவரணப் படத் தயாரிப்பு

பனை வளத்தின் பல்வேறு பயன்பாடுகளையும் விவரணப் படமாகத் தயாரித்து மக்கள் மத்தியில் விளம்பரப் படுத்துவதற்கும் பல்வேறு துறைசார்ந்த நிபுணர்களுக்கும், வெளிநாட்டு வர்த்தக ஊடகங்களுக்கும் வழங்குவதற்குமான விவரணப் படத்தினைத் தயாரிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை முனைந்துள்ளது.

இப்படம் 2.30 மணித்தியாலங்களுக்கு மேற்படாத வகையில் தயாரித்தல் வேண்டும். படப்பிடிப்பானது பனை வளத்துடன் நேரடியாகத் தொடர்புடைய மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்த உயிரோட்டமுள்ள குறும்பட அல்லது விவரணப் படத் தயாரிப்பில் அனுபவமுள்ளவர்கள் தமது தகைமைச் சான்றிதழ்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய இறுதி நாள் **05-02-2001.**

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.

விவரங்களுக்கு:
தலைமையகம்,
பனை அபிவிருத்திச் சபை,
53, கண்டி வீதி.
யாழ்ப்பாணம். (சி/15057)

# கருத்தரங்குகள்

கோப்பாய், ஜன. 30

"இலங்கையில் நாணயமாற்றும் அண்மைக்கால நெருக்கடியும்" என்ற தலைப்பில் இன்றுசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலை அரங்கில் கருத்தரங்கு இடம்பெறும்.

யாழ் பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் வி. பி. சிவநாதன் கருத்துரை நிகழ்த்துவார்.

இந்தக் கருத்தரங்கில் ஜி. சி. ஈ. (உயர்தர) வகுப்பில் பொருளியல் பாடக் கற்கும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-6-72)

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் கருத்தரங்குத் தொடரில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கச்சுசுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் "மறக்கப்பட்ட யாழ்ப்பாணத்துப் பாரம்பரியம் - ஒரு மீளாய்வு" என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (க-72)

## யாழ். நூல் நிலைய சுற்றாடல் துப்புரவு

யாழ். மத்திய நூல் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் பற்றைகள் வெட்டி துப்புரவாக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

யாழ். மாநகராட்சி மன்ற சிற்றூழியர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளனர். [க-17]


## யா/இணுவில் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 2001

காலம்:- இன்று 30 01-2001
செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 1-30 மணி.

இடம்:- கல்லூரி மைதானம்.

தலைவர்:- திரு. க. கனகராசா (அதிபர்)
பிரதம விருந்தினர், திரு அ. தற்பரானந்தன்:
(உதவிக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
சிறப்பு விருந்தினர்: திரு. க. ஆனந்தராசா
(முகாமையாளர், மக்கள் வங்கி, சுன்னாகம்)
கௌரவ விருந்தினர்கள்: திரு. ச. முத்துலிங்கம்
(முன்னாள் கிராம சபைத் தலைவர்)
திரு. ஆறு திருமுருகன் B. A.
(ஆசிரியர், யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- இணுவில் இந்துக் கல்லூரிச் சமூகம்

(சி/15058)



## வரலாற்றுக்கழக கருத்தரங்கு

தலைப்பு:- 'மறக்கப்பட்ட யாழ்ப்பாணத்துப் பாரம்பரியம்'—ஒரு மீளாய்வு

வழங்குபவர்:- கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் Ph.D.
(வருகை ஆய்வாளர், சுக்குசுயின் பல்கலைக்கழகம் — ஜப்பான்)

காலம்:- 31. 01. 2001 புதன்கிழமை
பி. ப. 2. 00 மணி (இலங்கை நேரம்)

இடம்:- வரலாற்றுத்துறை
அரும்பொருளகம்

ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

- வரலாற்றுக்கழகம்

(சி/15056)



இன்று 30-01-2001 தனது 3ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளான்

## FAST COMMUNICATION

சென்ற ஆண்டில் எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய வாடிக்கையாளர் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று காலை 9. 30 மணி தொடக்கம் மாலை 8. 00 வரை உள் வரும் அழைப்புக்கள் அனைத்தும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்.

3 ஆவது ஆண்டில் புதிய சேவையாக
EMAIL வசதியையும்
கொம்பியூட்டர் மையமான சேவையையும்
இன்று 30-01-2001 முதல் பெற்றுக் கொள்ளலாம்.

★ தங்கள் ஆதரவுக்கு என்றும் நன்றிகள் ★

உள்ளூர்: 021 - 2591
பக்ஸ்: 0094 - 21 - 2591

392, பிரதான வீதி,
சுண்டிக்குழிச் சந்தி,
யாழ்ப்பாணம். (83463)


# தையல்-மனையியல் ஆசிரியருக்கு கொழும்பில் பயிற்சி தரத் திட்டம்

## பொருள்காட்சி நிகழ்வில் அதிகாரி தகவல்

வலிகாமம் மேற்கு ஜன. 30

"நவீன காலத்துக்கேற்ப நவீன நாகரிகமான உடைகளைத் தைப்பதற்கும் மேற்குலக நாடுகளுக்கு ஏற்ற முறையில் உடைகளைத் தயாரிப்பதற்கும் உணவுகளைத் தயாரிப்பதற்கும் யாழ். மாவட்ட தையல், மனையியல் ஆசிரியர்களுக்குக் கொழும்பில் பயிற்சியை அளிப்பதற்கு வடக்கு.கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது"

இவ்வாறு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலக தையல், மனையியல் பொருட்காட்சியினைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் வடக்கு–கிழக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்கள கிராம அபிவிருத்தி உதவியாளர் கு. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

தையல், மனையியல் பொருள்காட்சியின் ஆரம்ப விழா பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் கடந்த சனிக்கிழமை காலை பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவினை கு. பாலகிருஷ்ணன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மு. பாலசிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

பொருள்காட்சியினைப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கு. பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:-

தற்போதைய நாகரிகத்துக்கேற்ற முறையில் உடைகளைத் தைப்பதன் மூலமே சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆசிரியர்களுக்குப் பயிற்சியைக் கொடுத்து அதன்மூலம் நவீன முறைகளை பயிற்சியாளர்களுக்கு வழங்க முடியும். மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஆசிரியர்களுக்குக் கொழும்பில் பயிற்சியை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வோம். போக்குவரத்துச் சீர்கேட்டினால யாழ். குடாநாட்டில் எமது பணிகளைக் குறித்த காலத்தில் செய்ய முடியாமல் இருக்கின்றது. யாழ் மாவட்டத்தில் கடமையாற்றும் சகல தையல், மனையியல் ஆசிரியர்களுக்கும் மிக விரைவில் கணனிப்பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

தற்போது கிராம, மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்கள் திறமையாகச் செயற்படுவதை அரிதாகவே காண முடிகிறது. இந்த நிலைமை முற்றாக மாறவேண்டும். கிராம அபிவிருத்தித் திணைக்களம் கிராமங்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்காகவே ஏற்படுத்தப்பட்ட திணைக்களம். ஆதலால் இந்தத் திணைக்களத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டியது கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகும். கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் பிரதேச மட்டத்தில் இணைந்து பிரதேச சமாசத்தையும், பிரதேச மட்ட சமாசங்கள் ஒன்றிணைந்து மாவட்ட மட்ட சமாசத்தையும் அமைப்பதற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். சமாசங்களை அமைப்பதன் மூலம் கிராமங்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல முடியும் — என்றார்.

### தலைமையுரை

பிரதேச செயலர் நா. வேதநாயகன் தமது தலைமையுரையில் —

இன்றைய காலகட்டத்தில் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு போட்டிபோட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆதலால் தையல் முறையில் பல நவீன நுட்பங்களைக் கையாளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கேற்றவாறு தையல் ஆசிரியர்களுக்கு பலதரப்பட்ட பயிற்சிகளையும் அளிப்பதற்கு வடக்கு — கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் யாழ். குடாநாட்டில் திறமையாகச் செயற்படக் கூடிய யுவதிகள் இருக்கின்றனர். இவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும். பயிற்சியை முடித்து வெளியேறுகின்ற யுவதிகளுக்கு சுய தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு சுழற்சி முறையில் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு கடன் வழங்குவதற்கு திணைக்களம் முன்வரவேண்டும் — என்றார்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. செல்வரத்தினம், பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மு. பாலசிங்கம் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். ஸ்ரீபதி தையல், மனையியல் பொருள் காட்சிக்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டார். (ஜ-175)

## சமய சந்நிதிகளில்

கொக்குவில் மாத்தளைக் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேக தின மணவாளக் கோல விழாவும், அஷ்டோத்தரசத சங்காபிஷேகமும் இன்று முற்பகல் 11 மணி முதல் இடம் பெறவிருக்கின்றது.

பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை அடுத்து சுவாமி வீதி வலம் வருவார். ( -3)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு 1008 சங்குகளுடன் வருடாந்த மகாசங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு நாராயண சேவையும் பிற்பகல் 3 மணிக்கு திருக்கல்யாணமும் திருவூஞ்சலும் இடம்பெற்று பூதேவி ஸ்ரீதேவி சமேதரராய் பெருமான் வீதி வலம் வருவார். (க)


## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொண்டு விலை விவரத்தை 03 - 02 - 2001 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/15055)


## மட்டுவில் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜன. 30

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மாணவர்களில் சீருடை, பாடநூல் பெறுவதற்கான பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாத மாணவர்களை உடன் பதிவுகளை மேற்கொள்ளும்படி வித்தியாலய அதிபர் கேட்டுள்ளார். (உ-3)


## முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல்

முதலாம் வருட கலைப்பீட மாணவர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று (30 - 01 - 2001) மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

- வருடப் பிரதிநிதி.

(83466)



## கருத்தரங்கு

இலங்கையின் நாணயமாற்று வீதமும் அண்மைக்கால நெருக்கடியும்

மேற்படி தலைப்பில் பொருளியல் துறைத் தலைவர்
V. P. சிவநாதன் அவர்களால்
இன்று (30-01-2001) பிற்பகல் 2மணிக்கு
கருத்தரங்கு
யாழ், பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்
நடைபெற உள்ளதால் பாடசாலை மாணவர்கள் உட்பட ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுகிறோம்.

இளம் பொருளியலாளர் மன்றம்,
யாழ். பல்கலைக் கழகம்.

(83473)

# ஈ.பி.டி.பியைக் கண்டித்து ரெலோ அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.30

"படமாளிகைக்குள் இருந்து கொண்டு வியாபார அரசியல் நடத்தும் நீங்களா மக்கள் சேவையாளர்கள்? கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிய முனையாதீர்கள், அரசின் கைப்பொம்மைகளாக இயங்கும் நீங்கள்தான் தமிழர்களின் குரல் வளையை நசிப்பவர்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்ட வேண்டிய அவசியம் எமக்கில்லை".

பணவசூல் வியாபாரம் தொடர்பாக ஈ.பி.டி.பி. அமைப்பினர் விடுத்துள்ள அறிக்கைக்குப் பதில் அளிக்கும் வகையில் ரெலோ அமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'முறையற்ற பணவசூல்களில் ஈடுபட்டு மக்களைக் கஷ்டப்படுத்தாதீர்கள்!' என்ற தலைப்பில் 29.01.2001 அன்று உதயன் பத்திரிகையின் 14ஆம் பக்கத்தில் ஈ.பி.டி.பி கட்சியினரால் வெளியிடப்பட்ட அறிக்கையில், "ரெலோ உட்பட அரசியல் கட்சிகளின் சில உறுப்பினர்கள் முறையற்ற பண வசூல் போன்ற விரும்பத்தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக அறிகின்றோம். இது மிகவும் கவலைக்குரியதும் வன்மையான கண்டனத்துக்குரியதுமாகும்." எனும் தோரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ..பி.டி.பி கட்சியினர் ஆகிய நீங்கள் எமது மக்களையும் தேசத்தையும் ஸ்ரீலங்காவின் சிங்களப் பேரினவாதக் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு விற்றுத் தினமும் பணம் சம்பாதித்துக் கொண்டிருப்பதை தமிழ்த் தேசம் அறியும். அது மட்டுமல்ல, தமிழ் மக்களுக்கு அரசாங்கத்திடமிருந்து வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தருவதாகக் கூறி வங்கி ஒன்றில் உத்தியோகம் பெறுவது என்றால் சுமார் ஒரு லட்சத்திலிருந்து இரண்டு லட்சம் ரூபா வரை தாங்கள் கோருவதாகவும் அறிகின்றோம். அத்துடன் ஆசிரியர்கள், சமுர்த்தி நியமனங்களுக்கும் தாங்கள் பணம் அறவிடுவதாகவும், கொழும்புக்குப் பிரயாணம் மேற்கொள்ள உள்ளவர்கள் விமான, கப்பல் ஆசனப் பதிவுகளுக்கு வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்புப் பகுதி இயங்கும் மணியம் கட்டடத்திற்கு சமுகம் தரும் போது தங்கள் கட்சி உறுப்பினர்கள் கைத்துப்பாக்கிகளுடன் உள்நுழைந்து, மக்களை நோட்டமிட்டு, வசதி படைத்தவர்களிடம் முன்னுரிமை ஆசனப் பதிவு எனும் பேரில் ரூபா ஐந்தாயிரம் தொடக்கம் பத்தாயிரம் வரை வசூலிப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

தங்கள் கட்சி உறுப்பினர்களின் இந் நடவடிக்கையால் குறிப்பிட்ட கட்டடத்துக்குள் பணியாற்றும் சில அதிகாரிகள் விசனத்துடன் காணப்படுவதாகவும் தங்கள் கட்சியால் நியமிக்கப்பட்ட ஒரு சில உயர் அதிகாரிகள் வாய் மூடி, மௌனிகளாக நிற்பதாகவும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. அது மட்டுமல்ல, யாழ்.குடாநாட்டில் தங்கள் கட்சியால் பொறுப்பேற்கப்பட்ட சில பிரதேச சபைகளில் அபிவிருத்தி என்னும் பேரில் மக்களின் வரிப் பணத்தை தங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் சூறையாடுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது விடயமாக குடாநாட்டு மக்களும் பரவலாகப் பேசுவதையும் காணமுடிகிறது.

குடா நாட்டுக்கான விளையாட்டு உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் பாரிய மோசடியும் முறைகேடும் நடந்துள்ளன. இதை நாம் விவரமாக விவரிக்கத் தொடங்கினால் மக்கள் வாயில் கையை வைப்பார்கள்.

தங்கள் அகராதியில் இவை முறைகேடான செயல்கள் அல்லப் போலும். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய தாங்கள் செய்து கொண்டிருக்கும் இத்தகைய செயல்கள் எல்லாம் முறையானது எனக் கருதுகின்றீர்கள் போலும்.

படமாளிகைக்குள் இருந்து கொண்டு வியாபார அரசியல் நடத்தும் நீங்களா மக்கள் சேவையாளர்கள்? கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிய முனையாதீர்கள். அரசின் கைப்பொம்மைகளாக இயங்கும் நீங்கள் தான் தமிழர்களின் குரல் வளையை நசிப்பவர்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்ட வேண்டிய அவசியம் எமக்கில்லை.

ரெலோவிடம் இருந்து ஆயுதங்கள் எல்லாவற்றையும் அரசாங்கம் பறிமுதல் செய்ததன் பின்னணியில் நீங்கள் தான் சூத்திரதாரிகள் என்பதை நாம் நன்கு அறிவோம். ரெலோவின் அரசியல் நடவடிக்கைகளைக் கண்டு அஞ்சும் நீங்கள், எம்மை ஆயுத ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அரசுடன் இணைத்து நசுக்கலாம் என தப்பான முறையில் எடைபோட்டுச் செயற்படுவதை உலகம் அறியும். உங்களின் குள்ளத்தனமான இச் செயல்களுக்குக் காலம் பதில் கூறும்!

கடந்த சில காலங்களில் எமது கட்சியில் ஏற்பட்ட நிதி நெருக்கடியால் கட்சியினருக்கு நன்கு அறிமுகமான சில வர்த்தகப் பிரமுகர்களிடம் நன்கொடை அடிப்படையில் - ஒரு புரிந்துணர்வான விளக்கத்தின் ஊடாக- எமது கட்சி உறுப்பினர்கள் நிதி பெற்றது உண்மைதான். மாறாக நீங்கள் குறிப்பிடுவது போல் மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் விதமாகக் கட்டாயப்படுத்தி, துன்புறுத்திப் பெற்றது கிடையாது. அப்படிப் பெறப்போவதும் இல்லை. அநாகரிகமான முறையில் முறைகேடாக எமது கட்சியினர் நடக்க மாட்டார்கள். அப்படி யாரும நடந்தால் மக்கள் தாராளமாகப் பொலீஸாரிடம் முறையிடலாம். அத்துடன் எமது கட்சியின் தலைமைப் பீடத்துடனும் தொடர்பு கொண்டு முறையிடலாம். எமது கட்சிக்குக் களங்கம் விளைவிக்க எண்ணியுள்ள சில தீய அரசியல் சக்திகள் எமக்குச் சேறு பூசும் விதத்தில் எமது கட்சியின் பெயரைப் பாவித்து மோசடிகளிலும் இறங்கலாம். எனவே மக்களை விழிப்புடன் இருக்கும் படியும் நாம் இச்சந்தர்ப்பத்தில் கோருகின்றோம்.- என்று உள்ளது.


## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

* ஒரு தொகுதிப் படங்கள் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.
* 01.02.2001 படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
* கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்கு வீடியோ கசட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும்.

புலோலி ☎ 070 212720 (83474) நல்லூர் ☎ 021-2604

## மக்சல் கவுஸ்

* ஒரு தொகுதிப் படங்கள் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.
* 01.02.2001 படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
* கொழும்பு மற்றும் வெளிநாடுகளுக்கு வீடியோ கசட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும்.

20, யூபிலி பசார்,
யாழ்ப்பாணம்.
☎ 021-2008
(83475)


## தவறிவிட்டது

அரியாலையைச் சேர்ந்த சின்னையா இராசலெட்சுமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (426970139V), விசேட அடையாள அட்டை என்பன கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இரட்ணசபாபதி மருந்துக்கடை, 131, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(C/15061)

## நன்றியொடு வாழ்த்துவோம்



திரு.வி.சிவஞானபோதன்(B.A.)
(வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி அதிபர்)

கல்லூரி வரலாற்றின் மூன்றிலொரு பகுதிக் காலத்தை கல்லூரியிற் கழித்து கல்லூரிப் பவளவிழா ஆண்டில் தன் கல்லூரிச் சேவையின் வெள்ளி விழாக்காணும் எங்கள் அதிபரின் சேவையைக் கௌரவப்படுத்தி நன்றியொடு வாழ்த்துகின்றோம்.

கல்லூரிப் பவளவிழாச் சபையும்,
வட்டு. இந்து வாலிபர் சங்கமும்.

(15052)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

(முன்னாள் அரசாங்க மரக்கூட்டுத்தாபன களஞ்சியப் பொறுப்பாளர், நல்லூர்)

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ் வண்ணார் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மாணிக்கலிங்கம் நேற்று முன்தினம்(28.01.2001) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் வல்லிபுரம் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராஜா சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராணியின் அன்புக் கணவரும் தர்மினி (வணிகத் துறை 1ஆம் வருடம், யாழ்.பல்கலைக் கழகம்), குமரேஸ்(மாணவன், A/L 2001 யா/பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் படிகலிங்கம்(U.K), இரத்தினலிங்கம் (பிரான்ஸ்), கனகேஸ்வரி(பிரான்ஸ்), சர்வேஸ்வரி (பிரான்ஸ்), பஞ்சலிங்கம் (பிரான்ஸ்), லிங்கேஸ்வரி, நிர்மலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவசக்தி, இராஜேஸ்வரி, ஜீவராஜா, காலஞ்சென்ற தேவராஜா மற்றும் நவநாதன், ஜெயந்திரா, பாலேந்திரன் (ஆஸ்திரேலியா), கௌரிதேவி (கனடா), விஜயராணி(கனடா), வாசுகி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுகந்தா, சிறீதரன், ஜெயசீலன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*566/3, கே.கே.எஸ்.வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்
நவநாதன(மைத்துனர்)
20, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.

(83467)

## ஏரம்பு கனகலிங்கம்

(சீமெந்துக் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியர்)

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், கச்சாய் றோட், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு கனகலிங்கம் (26.01.2001) வெள்ளிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் ஏரம்பு சின்னம்மாவின் மகனும் நாகேஸ்வரியின் (குஞ்சுக்கிளி) அன்புக் கணவரும் மனோராணி, மகேந்திரன் (யாழ்போதனா வைத்தியசாலை), கோகிலராணி, நிர்மலராணி (வன்னி), ரவீந்திரன், கலாராணி (கனடா), செல்வேந்திரன் (சுவிஸ்), குபேந்திரன், சொரூபராணி (நோர்வே), ஜெகேந்திரன், கனீந்திரன்(லண்டன்), தயாராணி (சாவகச்சேரி நகரசபை), சயிந்தாரணி (ஆசிரியை, வவுனியா), காலஞ்சென்ற திருவேந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் நாகராசா (இ.போ.ச. யாழ்ப்பாணம்), ஜெயராணி, நாகரத்தினம், வரதராஜா, மாலா, ராஜேந்திரன், வாசுகி, பஞ்சலிங்கம், மோகன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

***தற்காலிக முகவரி:***
*தும்பளை றோட்,*
*பருத்தித்துறை.*

***நிரந்தர முகவரி:***
*கச்சாய்றோட்,*
*சாவகச்சேரி.*

தகவல்:
க.மகேந்திரன்
(மகன்)

(83471)

## திருமதி மேரி திரேசா அருளப்பு

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி திரேசா அருளப்பு அவர்கள் நேற்று (29.01.2001) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற S.M. அருளப்புவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான றஞ்சினி, அலெக்ஸ் மற்றும் தெக்கிளாமாலினி, (ஜேர்மனி), ரூபினி(ஆசிரியை, நாரந்தனை றோ.க.ம. வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற யேசுதாசனின் அன்பு மாமியாரும் திருமதி பெலிசிற்றஸ்யேமன் அவர்களின் அன்புச் சகோதரியும், அருட் சகோதரி விக்டரின் (தி.சி.கன்னியர்), அருட்சகோதரி அன்சில்லா (தி.கு.கன்னியர்) ஆகியோரின் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று (30.01.2001) செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து யாழ். அடைக்கல அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*38, சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
யோசப் ராஜசேகரம்
(பேறாமகன்)

(83478)

## திருமதி தாமோதரம்பிள்ளை நாகரத்தினம்மா

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் குமாரசாமி வீதி, இல.12ஐ வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை நாகரத்தினம்மா நேற்று (29.01.2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பி தாமோதரம்பிள்ளை (முன்னாள் தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்துத்தம்பி - வள்ளியம்மையின் ஏக மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் - பாராசக்தியின் தலைமகளும், ஆறுமுகம், நடராசா (முன்னாள் அதிபர்), சவுந்தரநாயகி, கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சாரதாம்பாள், பவானி (ஆசிரியை), வித்துவான் வேந்தனார், நளாயினி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற மீனாட்சி மருதையனாரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (29.01.2001) திங்கட்கிழமை நடைபெற்றன. .

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா.கணபதிப்பிள்ளை
(இளைய சகோதரன்)

(83476)

# பிரதி மேயர், ஆணையாளர் இருவரும் பதவியேற்றனர்

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்.மாநகர சபையின் பிரதி முதல்வராக செல்லன் கந்தையன் நேற்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

யாழ்.மாநகர சபை அலுவலகத்தில் நேற்றுக் காலை 11 மணியளவில் இந்தப் பதவியேற்பு வைபவம் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் யாழ்.மாநகர மேயர் சட்டத்தரணி என்.ரவிராஜ் மற்றும் மாநகர சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதற்கிடையில் -

யாழ். மாநகர சபை ஆணையாளராக இராசா தணிகாசலம் நேற்று மாநகர மேயர் என்.ரவிராஜ் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ்.மாநகர ஆணையாளராகக் கடமையாற்றிய வி.பி.பாலசிங்கம் வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றதையடுத்து இராசா தணிகாசலம் புதிய ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இராசா தணிகாசலம் இதுவரை காலமும் மாநகர சபையின் பதில் ஆணையாளராகக் கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

புதிய மாநகர மேயரையும், பிரதி மேயரையும் வரவேற்கும் வகையில் வரவேற்பு வைபவம் ஒன்றும் நேற்று மாநகர அலுவல கத்தில் நடத்தப்பட்டது.

(உ-7-6-10-173)

# பத்திரிகையாளர் திருச்செல்வத்தை விடுவிப்பது குறித்து நேற்று விசாரணை

கொழும்பு,ஜன.30

கொழும்பில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள லேக்ஹவுஸ் பத்திரிகையின் பருத்தித்துறைச் செய்தியாளர் ஏ.என்.எஸ். திருச்செல்வத்தை விடுவிப்பது தொடர்பான விசாரணை ஒன்று கொழும்பில் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இவரது கைது தொடர்பாக அகில இலங்கைத் தமிழக் காங்கிரஸ் தலைவரும் எம்.பியுமான அ.விநாயகமூர்த்தி செய்த முறைப்பாட்டை அடுத்து ஆணைக்குழுத் தலைவர் பாயிஸ் முஸ்தபா தலைமையில் நேற்று விசாரணை ஒன்று இடம் பெற்றது.

திருச்செல்வம் கைது செய்யப்பட்ட பின்னர் கடுமையாகத் தாக்கப்பட்டார் என்று விநாயகமூர்த்தி விசாரணையின்போது தெரிவித்தார்.

குடாநாடு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் திருச்செல்வம் விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி வழங்கினார் என்று கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே அவரைக் கைது செய்ததாக விசாரணைக்குச் சமுகம் அளித்த பொலீஸ் அதிகாரி தெரிவித்தார்.

## புலிகள் தரப்பில் மரணம்

வவுனியா, ஜன.30

மாங்குளம் பகுதியில் 1998 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் தமது தரப்பில் வசீகரி (குணரெட்ணம் காயத்திரி - யாழ்ப்பாணம்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் தற்போது அறிவித்துள்ளனர். (உ-7-164)

## வான் புரண்டு எண்மர் காயம்

நெல்லியடி,ஜன.30

சண்டிலிப்பாயில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் பங்கு கொண்ட பின் துன்னாலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்களை ஏற்றி வந்த வான் ஒன்று நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் வல்லையில் தடம் புரண்டதில் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்தில் காயமடைந்த சி.வேலாயுதம்(வயது 50-சண்டி லிப்பாய்), எஸ்.தங்கமலர்(வயது 49-சண்டிலிப்பாய்), துன்னாலையைச் சேர்ந்தவர்களான கே.குணதாஸ் (வயது-28), கே.சவுந்தரராஜன் (வயது 32), ரி.சுரேஷ் (வயது23), கு.சுதாகரன்(வயது20), ரி.முருகதாஸ் (வயது 16) ஆகியோர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(உ-3-31-109-117)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும் அரையிறுதி ஆட்டத்தில் பண்ணாலை கணேசன் விளையாட்டுக் கழகமும் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (உ-3-86)

## ஏழு படையினர் காயம்

கொழும்பு,ஜன.30

தென்மராட்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் ஏழு படையினர் காயமடைந்தனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

கிளாலி முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் நான்கு படையினரும் -

நாகர் கோயில முன்னரங்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் சிப்பாய் ஒருவரும் -

அரியாலையில் கண்ணிவெடிகளை அகற்றிக் கொண்டிருந்த சமயம் இரு படையினரும் - காயமடைந்தனர் என தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

பல்வேறு சம்பவங்களில் விடுதலைப்புலிகளின் மூன்று உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)


துரிதமீட்டல் - வினா விடை வகுப்பு

LOGIC-A/L 2001

எஸ். எஸ். மனோகரன்

ஆரம்பம்: நாளை (31.01.2001) புதன் மாலை 4 மணி

(நேர அட்டவணை வகுப்பில் தீர்மானிக்கப்படும்)

| அத்தியாயம் | காலப்பகுதி |
|---|---|
| ✪ குறியீட்டு அளவையியல் ✪ விஞ்ஞானிகள்-கொள்கைகள் | மாசி, பங்குனி |
| ✪ விஞ்ஞானமுறை ✪ வென் படம் | சித்திரை,வைகாசி |
| ✪ உடன் அனுமானம் ✪ ஊடக அனுமானம் | ஆனி |
| ✪ சிறு குறிப்புகள் (பகுதி I) ✪ போலிகள் | ஆடி |

FURTHER EDUCATION

(உடுவில் மகளிர் கல்லூரி)

(83535)


# நோர்வேயின் பங்களிப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் - அந்தக் குழு தூதரிடம் விளக்கிக் கூறியது.

"விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் நோர்வே அரசுக்கும் இடையில் தொடர்புகள் உள்ளன. இந்த நிலையில் சமாதான முயற்சியில் நோர்வே தலையிடுவதை அனுமதிக்க முடியாது; நாம் அனுமதிக்கப் போவதுமில்லை" என்று அந்தக் குழு எச்சரிக்கை விடுத்ததாகக் கூறப்பட்டது.

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பாக தூதர் விளக்கிக் கூறினார்.

சமாதான முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம் என்று அவர் பிக்குகளிடம் கோரிக்கை விடுத்தார். (உ-3-7)

# பகிரங்க விவாதத்துக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் பகிரங்க விவாதத்திற்குத் தயாராகுமாறும் மகேஸ்வரன் எம்.பி சமாசத் தலைவர் சிவஞானத்திற்குத் தெரியப்படுத்தி இருக்கின்றார்.

"இப்பிரச்சினையை எமது குடாநாட்டு மக்களின் முன்பாகத் தீர்ப்பதற்கு நாம் முயற்சிப்போம். அதற்குச் சாதகமான பதிலை அடுத்த 48 மணிநேரத்தினுள் அறிய விரும்புகின்றேன். முடியாத பட்சத்தில் இப்பிரச்சினையை நாடாளுமன்றத்தில் மேலும் பல விவரங்கள் மற்றும் ஆவணங்களுடன் எழுப்பி, சம்பந்தப்பட்ட அமைச்சருடன் விவாதத்தில் ஈடுபட நேரிடும்" - என்றும் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் எழுப்பியுள்ள 30 கேள்விகளிலும் அடங்கியுள்ள விடயங்களின் சுருக்கம் வருமாறு:-

✪ சிவஞானம் சமாசத்தின் தலைவராக வந்த பின், யாழ்ப்பாணத்தில் இயங்கும் 23 கூட்டுறவுச் சங்கங்கள் கொழும்புக்கு கொள்வனவு செய்யச் செல்வதற்குத் தயங்குவதற்கான காரணம்.

✪ நாட்டில் யாழ்ப்பாணம் த்விர்ந்த ஏனைய எந்த இடத்திலும் ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் சுயமாக இயங்குவதை யாரும் கட்டுப்படுத்தாமை.

✪சுயமாகப் பொருள்களைக் கொண்டுவர முடியாததால் ப.நோ.கூ சங்கங்களுக்கு ஏற்படும் பேரிழப்பு.

✪ சமாசத்தின் தலைவராக சிவஞானம் வர முன்னரும் 23 சங்கங்களுக்கும் கிடைத்த இலாபத்தின் வித்தியாசம்.

✪ சமாசத் தலைவராக வந்த பின் கொழும்பிலிருந்து சிவஞானம் தருவித்த பொருள்களின் அளவு, அதன் விநியோகம், விலைக்கணிப்பு.

✪ கொழும்பில் பொருள்களைக் கொள்வனவு செய்தவர் கூட்டுறவு ஊழியரா? யாரைக் கொண்டு பொருள் கொள்வனவு நடக்கிறது?

✪ பொருள் கொள்வனவுக்கும் கப்பல் மூலம் தருவிப்புக்கும், லொறியில் ஏற்றி இறக்குவதற்கும் எந்தக் கேள்விப்பத்திர நடைமுறையும் பின்பற்றப்படாதமை. அதில் நடக்கும் ஊழல்கள்.

✪ தைப்பொங்கல் காலத்தில் கையிருப்பில் இருந்த பெருமளவு சர்க்கரை, பயறு போன்றவற்றை தனியார் வர்த்தகர் ஒருவருக்கு - எந்த அனுமதியுமின்றி - விற்றமை.

✪ 'உகண' கப்பலில் வந்த பொருள்கள் மூழ்கியதைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முறையற்ற நடவடிக்கைகள், அப்போது இடம்பெற்ற உள்வீட்டு விவகாரங்கள், குளறுபடிகள்.

✪ 'உகண' கப்பல் பொருள்களுக்கு நஷ்டஈடு பெறுவதில் சிரத்தை காட்டாத போக்கு. அந்த நஷ்டத்தை சங்கங்கள் மீது கட்டியடித்த செயல்.

✪ கடந்த வாரம் சஜிந்த கப்பலில் வந்த பொருள்களை முறையற்ற விதத்தில் தனியார் ஒருவருக்கு குறைந்த விலையில் வழங்கி, குறுக்கு வழியில் நடந்து கொண்டமை பற்றிய விவரங்கள்.

✪ ஒரு வருடத்துக்கு முன்பு நடந்த - பல லட்சம் ரூபா பெறுமதியான - வாசிக் கொள்வனவில் வழங்கப்பட்ட 35 வீத கழிவுக்கு என்ன நடந்தது?

✪ தேங்காய் கொள்வனவு, அது கப்பலில் ஏற்றப்பட்ட நடைமுறை மற்றும் விற்பனையில் நடந்த ஊழல்கள்.

✪ சிவஞானத்துக்கு ஆதரவாக சமாசக் கூட்டத்தில் உரையாற்றிய ஒரு ப.நோ.கூ. சங்கத் தலைவரும் அவரது மனைவியும் அண்மையில் கூட தேயிலைக் கொள்வனவில் புரிந்த மோசடிகள்.

✪ முன்னைய தேர்தலில் தெரிவான எம்.பிக்கள் தலையிடாவிட்டாலும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை, இப்போதைய எம்.பிக்கள் பணிபுரியும் - கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட - போக்கு

இப்படி பல்வேறு குற்றச் சாட்டுக்களை விலாவாரியாக அடுக்கியிருக்கின்றார் மகேஸ்வரன்.

(உ)


அண்ணா பாம்

இறைச்சிக் கோழிகள்

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் (Broiler)

மொத்தமாகவும்

சில்லறையாகவும்

மலிவு விலையில்

பெற்றுக்கொள்ளலாம்.

அண்ணா பாம்

(C/15059) இணுவில்.


## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண ஆஸ்பத்திரிகளிலும் நேற்று அடையாள வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தப்பட்டது.(உ-7-6-1015-17-139-173)

## பூமியதிர்ச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புஜ் பகுதியில் நேற்று மாலை-பூமியதிர்ச்சி நடந்து சுமார் 80 மணித்தியாலங்களின் பின்னர்- மூன்று அல்லது நான்கு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவனை மீட்புப் பணியாளர்கள் கட்டட இடிபாடுகளுக்குள் கண்டு பிடித்தனர்.

இடிபாடுகளுக்குள் இருந்து சிறுவனை வெளியேற்றுவதற்கு சிறுவனின் ஒரு காலை வெட்டி அகற்ற வேண்டிஇருக்கின்றது என்றும் -

இதற்காக சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவர் அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

புஜ் பகுதியில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த சீக்கியப் படையினர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த-90 வயதுடைய-வயோதிப மாது ஒருவரை மீட்டனர். பழைய தையல் மெஷின் ஒன்று அவரது தலையை நசுங்க விடாது கவசமாகப் பாதுகாத்திருந்தது.

இடிபாடுகளுக்கிடையில் உயிருக்காகக் குரல் எழுப்பிக் கொண்டிருந்த மற்றிருவரின் குரலை தான் கேட்டதாகவும் அவர் சொன்னார்.

மோசமாகப் பாதிக்கப்பட்ட புஜ் பகுதிக்கு பிரதமர் வாஜ்பாய் நேற்று நேரடியாகச் சென்று நிலைமையை பார்வையிட்டார். (உ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசம்மா தாமோதரம்பிள்ளை

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தாமோதரம்பிள்ளை நேற்று (29.01.2001) திங்கட்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற 'பக்திப்பாடல் அரசு' திருஸ்ணமூர்த்தி (யாழ்.மாநகர சபை), திருமதி மங்கயற்கரசி (வடக்கு - கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சு - திருகோணமலை), திருமதி கங்காதேவி (ரஞ்சி-வவுனியா) திருமதி கமலநாயகி தேவராஜா (பேபி - இசை ஆசிரியை, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திராணி, கதிரவேலு (C.T.B.) ஜெகதேவன் (உரும்பிராய்), தேவராஜா (Master Scale Service Engineering Works - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமியாரும், தர்மசீலன் (கண்ணன்), குணசீலன் (ரங்கன்), மாலதி, ஜெயசீலன் (கொழும்பு), ஞானசீலன் (சீலன்), கிருஷாந்தன் (கொழும்பு), துஷாந்தன், துஷியந்தி, இன்பசாந்தன், கம்சாயினி (திருகோணமலை), சித்தாமோகன் (லண்டன்), வாகீசன், வித்தியதீபன், பிரகாஷினி (லதனி-வவுனியா), தஷிகா (சங்கீதா- ஆண்டு 10 மாணவி, சுண்டிக்குழி மகளிர் கல்லூரி), விகர்சன்( கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2001) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சங்கீதா பாலர் பாடசாலை,*
*163, கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில்.* (C/15062)

தகவல்:
திருமதி க.தேவராஜா (பேபி)
(மகள்)

## திருமதி சின்னத்தம்பி யோகம்மா

கைதடியைப் பிறப்பிடமாகவும் அலுக்கைச்சந்தி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி யோகம்மா நேற்று (29-01-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் வள்ளியம்மை கதிர்காமநாதன் (ப.நோ.கூ.சங்கம், கைதடி), செல்வஸ்கந்தராஜா (சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-01-2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

***தற்காலிக முகவரி:***
*அலுக்கைச் சந்தி,*
*அளவெட்டி மத்தி,*
*அளவெட்டி.* (C/15063)

தகவல்:
சி.கதிர்காமநாதன்.

## செல்வி சுபாசினி யோகராசா

**[க.பொ.த. (உயர்தர) விஞ்ஞானப்பிரிவு மாணவி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர கல்லூரி - பருத்தித்துறை]**

செல்வி சுபாசினி யோகராசா நேற்று (29.01.2001)திங்கட்கிழமை பிற்பகல் அகாலமரணமானார்.

இவர் முருகுப்பிள்ளை யோகராசா-பூமணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் விஜயலதா(ஆய்வுகூட உதவியாளர், வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), விஜயகுமார் (லண்டன்), ரஞ்சித்குமார், பாலகுமார் ஆகியோரின் அன்புச சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2001) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மந்திகை கருகம்பனை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*விஜயா இல்லம்,*
*குரும்பைகட்டி,*
*புலோலி வட மேற்கு,*
*புலோலி.* (C/15054)

தகவல்:
மு.யோகராசா
(தந்தை)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.